TARGETING

SURESH' IAS ACADEMY

# TNPSC

## GROUP-II 2023



QUESTION WITH SIMPLIFIED ANSWER

**MAINS WRITTEN EXAM**

8th தேர்வு

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிர்வாகம்

- மின் ஆளுகை
- பட்ஜெட்
- நிதி நிர்வாகம், மாநில நிதி

Marks : 300
Time : 3 Hrs

தமிழ் வழி


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970<br>99445 11344 | 0462 - 2560123<br>98942 41422 | 75503 52916<br>75503 52917 | 0452 - 2383777<br>98431 10566 | 97555 52003<br>97555 52009 |

TEST 8 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

**அலகு - 1**

**1) மாநில அரசின் வருவாய் மூலங்கள் யாவை? 1.5**


- இந்திய மாநிலங்கள் சொந்த வரிகள், மத்திய அரசின் வரிகள், வரி அல்லாத மத்திய மானியம் ஆகியவற்றின் மூலம் வருவாயைப் பெறுகிறது.
- பெரும்பாலான மாநிலங்களில், வருவாயில் அந்தந்த மாநிலங்களின் சொந்த வரியே பெரும்பங்கை வகிக்கிறது.

**<u>சொந்த வரி வருவாய்</u>** **1.5**


- வருவாயின் மீதான வரி - வணிக வரி, தொழில்கள் மீதான வரி, வேலைவாய்ப்பு அழைப்புகள் உள்ளிட்டவை மீதான வரி.
- நிலவரி, பதிவு மற்றும் முத்திரைத்தாள் வரி, நகர்ப்புற அசையா சொத்துக்கள், உள்ளிட்ட சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகள் மீதான வரி.
- விற்பனை வரி, மதிப்புக் கூட்டுவரி, மாநில மற்றும் மத்திய விற்பனை வரி, விற்பனை வரியின் மீதான கூடுதல் கட்டணங்கள், முதலீட்டு வரியின் ரசீதுகள், மாநில கலால் வரியினை உள்ளடக்கிய பண்டங்கள் மற்றும் பணிகளின் மீதான வரி.

**<u>வரி அல்லாத வருவாய்</u>**

- இறையுறு சொத்து (வாரிசு இல்லாமல் போகும்போது அரசால் எடுத்துக் கொள்ளப்படும் சொத்து)
- மின்சார வரிகள்
- கட்டணங்கள்
- உரிம வரி
- வட்டிகள்
- அபராதம் மற்றும் தண்டங்கள்




- 46% - மாநில சொந்த வரி வருவாய்
- 26% - மத்திய வரி பங்கீடுகள்
- 20% - மானியங்கள்
- 8% - மாநில வரி அல்லாத வருவாய் **3**




**2) நிதிக் கொள்கையின் நோக்கங்கள் யாவை?**

**<u>நிதிக்கொள்கை</u>** **6**

- இது ஒரு அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றி விவரிக்கிறது.
- வருவாயினை பெருக்கி செலவினங்களைக் குறைப்பதே நிதிக்கொள்கை என்று அறியப்படுகிறது.

**<u>நிதிக் கொள்கையின் குறிக்கோள்கள்</u>**

**<u>1. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்</u>**

- அரசானது, இரும்பு, வேதி - உரங்கள், எந்திர உதிரி பாகங்கள் மற்றும் கட்டிட உட்கட்டமைப்புகளாக கனரக தொழிற்சாலைகளை நிறுவி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகிறது.

**2. வருவாய் மற்றும் சொத்துக்களின் மீதான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்**

- வறுமையில் உள்ளோர்க்காக அதிக நிதி ஒதுக்கி, பணம் படைத்தவர்களின் மீதான வரிகளை அதிகப்படுத்தும் முறை

**3. வேலைவாய்ப்பு உருவாக்கம்**

- பொதுத்துறை நிறுவனங்களை நிறுவி வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- விலைகளை கட்டுப்படுத்தும் விதமாக மானியங்கள் மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல்

**4. தொகை செலுத்து பற்றாக்குறை**

- ஏற்றுமதியை அதிகரித்து, இறக்குமதியை குறைத்து, தொகை செலுத்துதலில் திகழும் பற்றாக்குறையை குறைக்கும் முயற்சி.

**சமீபத்திய நிதிக் கொள்கை**

- 2022 - 23ஆம் ஆண்டில் 6.4% மொத்த உள்நாட்டு உற்பத்தியாக விளங்கு போதிலும் தொகை செலுத்து பற்றாக்குறை ஏற்படும் என்றும் அதை களைவதற்கு நடப்பு செலவினங்களை குறைத்த போதிலும், மூலதன செலவினங்களானது தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது.

**3) பொதுக்கடனின் வகைகள் யாவை?**

**பொதுக்கடன்** 6

- இது ஒரு அரசால் பெறப்பட்ட மொத்த கடன்களைக் குறிக்கிறது.
- இக்கடன்களை ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு திரும்ப செலுத்துவது மத்திய அரசின் கடமையாகும்.
- பெருங்கொள்ளை நோயின் காரணமாக, மார்ச் 2021இன் படி பொதுக்கடனானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60.5% ஆக உள்ளது.

**பொதுக்கடன்களின் வகைகள்**

**1. உள் கடன்கள்**

- மற்ற நாடுகளில் இருந்து பெறப்பட்ட பொதுக் கடன்களைக் குறிக்கிறது.
- உதாரணமாக, அரசாங்க பத்திரங்களை வாங்கிய முதலியன.

**2. வெளிக்கடன்கள்**

- சர்வதேச அமைப்புகளிடமிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெறப்பட்ட கடன்கள்
- சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி (WB) முதலியன.

**3. உற்பத்திக் கடன்கள்**

- ரயில்வே, மின்சார திட்டங்கள், பாசன திட்டங்களின் மூலம் வருவாயை அதிகரிக்க பெறப்படும் கடன்கள்.

**4. உற்பத்தியில்லாத கடன்கள்**

- வருவாயில்லாத சொத்துக்களின் மீதான கடன்கள்
- உதாரணமாக வருவாய் பற்றாக்குறை தொடர்பானச் கடன்கள், போர் நிதி, பஞ்சம், நிலநடுக்கம் முதலியன

**5. நிதியளிக்கப்பட்ட கடன்**

- ஒரு வருடத்திற்கு பின்பும் திரும்ப செலுத்தக்கூடிய நீண்டகால தன்மையுடையது.

**6. நிதியளிக்கப்படாத கடன்**

- இது ஒரு குறுகிய கால, ஒரு வருடத்திற்குள் திரும்ப செலுத்த வேண்டிய கடன் ஆகும்.
- உதாரணமாக, கருவூல நிதி பரிமாற்றங்கள்

**4) நிதித்துறை சட்ட சீர்திருத்த ஆணையம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**தோற்றம்** 1

- மார்ச் 2011இல் உருவாக்கப்பட்டது.
- மத்திய நிதி அமைச்சகத்தைச் சார்ந்தது
- மார்ச் 2013இல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**குறிக்கோள்** 1

- இந்திய நிதி அமைப்பினை கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களை மறு ஆய்வு செய்தல் மற்றும் திருத்தத்திற்கு பரிந்துரைத்தல்.
- நடைமுறை கட்டமைப்பில் உள்ள சீரற்ற தன்மை, இடைவெளிகள், உள்ளிட்ட குறைகளை இனங்காணுதல்

**முக்கிய அம்சங்கள்** 4

**1. இந்திய நிதிக் குறியீடு வரைவு**

- துறை சாராத, கொள்கை அடிப்படையிலான 60 சட்டங்களை ஒருங்கிணைத்தல்

**2. நுகர்வோர் பாதுகாப்பு**

- ஒற்றைத் தலைமை கொண்ட ஒன்றுபட்ட நிதி முகமையை உருவாக்குதல்

**3. விவேகமான நுண்சுழற்சி**

- இந்த வரைவானது விவேகமான நுண் முயற்சிகளின் சுழற்சியையும் அதன் வெளிப்பாடுகளையும் விவரிக்கிறது.

**4. தீர்மானங்கள்**

- நிதி நிறுவனங்கள் தொடர்பான ஒன்றுபட்ட தீர்மானங்கள் கொண்ட ஒரு நிறுவனத்தை கட்டமைத்தல்

**5. பொதுக் கடன் மேலாண்மை**

- நிதித்துறை சட்டசீர்திருத்த ஆணையமானது, குறைந்த செலவில், நீண்ட கால தீர்வுகளை கொண்ட முகமையாக விளங்குகிறது.

**6. அமைப்பு ரீதியான பிரச்சினைகள்**

- நிதி ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்ற நிறுவனமாக ஒரு சட்டரீதியான முகமையை உருவாக்குதல்

7. **பணவியல் கொள்கை**

- ரிசர்வ் வங்கியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து, ஒரு நிர்வாக பணவியல் கொள்கை குழுவை தோற்றுவிக்கிறது.

**5) தமிழ்நாடு தரவு கொள்கை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

**தோற்றம்** 1

- 2022ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- கரு- பொதுப் பொருட்களுக்கான தரவுகள்

**குறிக்கோள்** 1

- தமிழக அரசுக்குள் தரவுகளின் உரிமையாளர்களுக்கான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துதல்
- பாதுகாப்புடன் கூடிய வெளிப்படையான அணுகுதலை அத்தனை பங்குதாரர்களுக்கும் ஏற்படுத்தித் தருதல்.

**தரவு நிர்வாகக் குழு நடைமுறைப்படுத்துதல்** 4

- தலைமைச் செயலாளரால் நிர்வகிக்கப்படுகிறது.
- இவர், கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான சிறந்த ஆலோசனைகளை அளிக்கிறார்.

**துறைகளுக்கு இடையிலான தரவுக்குழு**

- தமிழ்நாடு மின் நிதி முகமையின் தலைமை நிர்வாகியால் நிர்வகிக்கப்படுகிறது.
- தரவுகளுக்கான தலைமை அதிகாரியாக விளங்குகிறது.
- செயல்பாட்டு முடிவுகளை மேற்கொள்கிறது.

**மாநில அரசால் மேற்கொள்ளப்படும் பணிகள்**

- அநாமதேயப்பட்ட தரவுகளை குறிப்பிட்ட காரணங்களுக்காக பகிரப்படுவதற்கான வழிகாட்டு முறைகள்
- அரசு பதிவேடுகளில் உள்ள அத்தனை தரவுகளுக்கான அட்டவணை உரிமை விபரங்களுடன் தொகுத்தளிக்கப்படுகிறது.
- துறை சார்ந்த நிறுவனங்களுடனான தரவு பகிர்தலை தடுப்பதற்காக, பாதுகாப்பான தனியுரிமை கொண்டு அடையாளப்படுத்துதல்
- நெறிப்படுத்துதலுக்கான ஒரு நிலையான கட்டமைப்பை உருவாக்குதல்

**6) சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.**

**GST** 1

- மறைமுக வரி, மதிப்புக் கூட்டு வரி, கலால் வரி, சேவை வரி உள்ளிட்ட வரிகளுக்கு பதிலாக பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியே GST ஆகும்.
- GST ஆனது ஜூலை 1, 2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**GST இன் வகைகள்** 5

1. **மத்திய GST**

- ஒரு மாநிலத்துக்குள் பரிமாற்றங்களுக்கு உட்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மத்திய அரசால் விதிக்கப்படும் வழியாகும்.
- இது மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது ஆகும்.
- இது சேவை வரி, கலால் வரி ஆகியவற்றை உள்ளடக்கியது.

2. **மாநில GST**

- மாநில அரசால், அந்தந்த மாநிலங்களுக்கு விதிக்கப்பட்டது ஆகும்.
- இது மதிப்புக் கூட்டு வரி, ஆடம்பர வரி ஆகியவற்றை உள்ளடக்கியது.

3. **ஒருங்கிணைந்த GST**

- மாநிலங்களுக்கு இடையிலான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரியாக விளங்குகிறது.
- ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு பரிமாறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரியாக விதிக்கப்படுகிறது.

4. **யூனியன் பிரதேசங்களுக்கான GST**

- இந்த வரியானது 5 யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் பொருந்தும், அவை லட்சத்தீவு, தாமன் மற்றும் தையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, அந்தமான் மற்றும் நிக்கோபார், சண்டிகர் ஆகியவை ஆகும்.

5. **ஏற்றுமதிக்கான IGST**

- அனைத்து ஏற்றுமதிகளும் IGSTஇன் கீழ் மாநிலங்களுக்கு இடையிலான பரிமாற்றங்களாகவே கருதப்படுகிறது.
- ஏற்றுமதிகள் பூஜ்ய மதிப்பிடப்பட்டதிலிருந்து அனைத்து ஏற்றுமதிகளுக்கும் ஆனது விதிக்கப்படவில்லை.
- ஏற்கனவே செலுத்தப்பட்ட ஏற்றுமதிக்கான செலுத்துதல்கள் திரும்பியளிக்கப்பட்டன.

**7) தேசிய பேரிடர் மேலாண்மைக்கான கொள்கையின் நோக்கங்களை எடுத்தியம்புக.**

- இக்கொள்கையானது தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005இன் கீழ் உருவாக்கப்பட்டது.
- முழுமையான அளவில் பேரிடரை கையாள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகிறது.

**NPDMஇன் முக்கியக் கூறுகள்** 6

1. **பேரிடரிலிருந்து பாதுகாத்தல் குறித்த அறிவை வளர்த்தல்**

- பாதுகாப்பு, முன்னேற்பாடு மற்றும் அனைத்துத் தளங்களையும் பற்றிய அறிவு, கல்வி, கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவைகளில் சிறந்து விளங்கச் செய்தல்.

2. **பேரிடர் தணிப்பு நடவடிக்கைகளுக்காக ஊக்கப்படுத்துதல்**

- இது தொழில்நுட்பம் பாரம்பரிய அறிவு, நிலையான சுற்றுச்சூழல் ஆகியவற்றைக் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

3. **பேரிடர் மேலாண்மையின் முக்கிய நோக்கங்கள்**

- மேம்பாட்டுத் திட்டமிடுதலே முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது.
- பேரிடரிலிருந்து ஒரு பாதுகாப்பான வாழ்க்கை முறையை மேற்கொள்வதற்காக ஒரு மீள்தன்மையுடைய கட்டமைப்புகளை உருவாக்குதல்

4. **ஆபத்தை அறிதல்**

- ஆபத்து ஏற்படுவதற்கான காரணங்களை முன்னரே அடையாளங்கண்டு மேற்பார்வையிடுவதற்கு ஏற்ற செயல்முறையை உருவாக்குதல்.
- தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியுடன் பேரிடர் ஏற்படும் பொழுதோ அல்லது அதற்கு முன்னரே அறிவுறுத்தும் கருவிகளை உருவாக்குதல்.

5. **ஊடகத்துடனான உறவு**

- பேரிடர் மேலாண்மைக்கான செயலூக்கமுள்ள உறவை ஊடகத்துடன் பேணுதல்

6. **திறம்பட செயல் மற்றும் மீள்தல்**

- சமூகத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கிய பரிவான அணுகுதலும், அவர்களை மீட்பதற்கான நோக்கங்களும்

7. **தேசியப் பேரிடர் மீட்புப் படை**

- 4.5 லட்சத்திற்கும் மேலான மனிதர்களை காப்பாற்றியுள்ளது.
- 2000க்கும் மேலான இறந்த உடல்களை மீட்டெடுத்துள்ளது.

8) **மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையேயான வரி தடுப்பாற்றல் பற்றி விளக்குக.**

- இந்திய அரசியலமைப்பானது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான ஒரு பரஸ்பர வரி விதிப்புக்கான கொள்கைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. **2**

**மத்திய சொத்துக்களின் மீதான மாநில வரி விலக்குகள்**

- உள்ளாட்சி அரசுகள், மாவட்ட மற்றும் பஞ்சாயத்து அளவிலான அரசாங்கங்கள் உள்ளிட்ட எந்த மாநில அதிகாரங்கள் விதிக்கும் வரிகளிலிருந்து மத்திய அரசுக்கு சொந்தமான சொத்துக்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
- இதனை மாற்றுவதற்கு பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரம் உண்டு.
- மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமானது வரி விதிப்புகளிலிருந்து விலக்கு பெறுகிறது.
- இது ஒரு தனிப்பட்ட சட்ட நிறுவனமாக விளங்குகிறது.

**மத்திய வரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்ற மாநில சொத்துக்கள்** **2**

- மாநில அரசின் சொத்துக்களுக்கும் வருவாய்க்கும் மத்திய வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- எனினும் பாராளுமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஒரு சில வர்த்தக நடவடிக்கைகளுக்கு வரி விதிக்கப்படுகிறது.
- அரசின் வழக்கமான செயல்பாடுகளாக கருதப்படும் வணிக நடவடிக்கைகளுக்கு வரி விதிக்கப்படுவதில்லை.
- மாநிலத்துக்கு உட்பட்ட உள்ளாட்சி அரசாங்கத்துக்கு சொந்தமான சொத்துக்களுக்கும், வரி விதிப்புகளுக்கும் விலக்கு அளிக்கப்படுவதில்லை.
- மாநிலங்களுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு மத்திய அரசால் வழி விதிக்கப்படுகிறது.
- உச்சநீதிமன்றம், தங்களது ஆலோசனை கருத்தாக 24 (1963), ஒரு மாநிலத்தில் உருவாக்கப்பட்ட பொருளானது ஏற்றுமதி அல்லது இறக்குமதி தொடர்பாகவோ அல்லது பொருளின் மீதான கலால் வரியாகவோ, விதிக்க மத்திய அரசுக்கு அறிவுறுத்துகிறது.

**அவசர காலச் சட்டங்களின் விளைவுகள்** **2**

- விதி 352 – தேசிய அவசர நிலையின்போது, குடியரசுத் தலைவர் வருவாய் பகிர்வை மாற்றியமைக்கலாம்.
- விதி 360 – நிதி நெருக்கடி அவசர நிலையின்போது, மாநில நிதி தொடர்பான பிரச்சினைகளில் மத்திய அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றுகிறது.

9) **பின்வருவனவற்றை விளக்குக.**

a) **எளிமையாக்கம்**

b) **e - பார்வை**

c) **நமது அரசு**

a) **எளிமையாக்கம்** **2**

- சமூகமான மாநில ஆட்சி முறைக்கான ஒரு புதிய தொடக்கம்.
- அதிக மக்கள் தொடர்பு உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது.
- உரிமங்கள், சட்ட திருத்தங்கள், அறிவிக்கைகள் ஆகியவற்றில் செயல்முறை இணக்கம் கொண்டது.

b) **இ-பார்வை** **2**

- மனித பார்வை குறைபாட்டிற்கு காரணமான கண்புரை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கான செயலி ஆகும்.
- தமிழ்நாடு ஆட்சி முகமையின் கீழ் போதிய கண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் கண்புரையை கண்டறிவதற்கான மொபைல் செயலியை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் செயலியானது கண்புரையின் வளர்ச்சி, தாக்கம் குறித்து 91% துல்லியமான தகவல்களை அளிக்கிறது.

**c) நமது அரசு** 2

- ஆட்சிமுறை செயல்பாடு தொடர்பான தகவல்களை குடிமக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- குடிமக்களை மையப்படுத்தி, சிறந்த ஆட்சிமுறைக்காக குடிமக்களுக்கு அதிகாரமளித்து ஊக்கப்படுத்தும் ஒரு முயற்சி ஆகும்
- 2017-18இல் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக அரசானது நிர்வாகத்திற்காக 91.80 லட்சமும், நிதிக்கக 47.95 லட்சமும் முதல் வருடத்திற்கான ஒதுக்கீடு செய்துள்ளது.

**10) இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 269-ல் குறிப்பிட்டுள்ளபடி மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் யாவை?**

**ஷரத்து 269இன் அம்சங்கள்** 6

- வரியானது மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட மாநிலங்களிலேயே ஒப்படைக்கப்படுகிறது.

**அவையாவன:**

- விவசாய நிலம் அல்லாத சொத்துக்களின் வாரிசுகளுக்கான கடமைகள்
- விவசாய நிலம் அல்லாத சொத்துக்களின் மீதான மாநிலங்களின் கடமைகள்
- ரயில், கடல் மற்றும் வான் வழி பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்களின் மீதான முனைய வரி.
- ரயில்வேயின் சரக்கு மற்றும் கட்டணங்கள் மீதான வரி
- பங்குச் சந்தை பரிவர்த்தனைகள் தொடர்பான முத்திரை வரி அல்லாத பிற வரிகள்
- செய்தித்தாள் விற்பனை மற்றும் விளம்பரங்களின் மீதான வரிகள்.
- மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தக அடிப்படையில், செய்தித்தாள் தவிர்த்து, விற்ற மற்றும் வாங்கிய பொருட்களின் மீதான வரிகள்.

**11) பொது நிதியில் அரசின் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?**

**காரணங்கள்**

**மக்கள் தொகை அதிகரிப்பு:** 6

- வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களுக்கான தேவைகளும் அதிகரித்து உள்ளது. அதனை சமன் செய்ய அரசானது மிகப்பெரிய அளவிலான செலவினங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**பாதுகாப்பு குறித்த செலவினங்கள்**

- தேசங்களுக்கு இடையிலான நிலையற்ற உறவுகள் காரணத்தால் போர் இல்லாத அமைதி காலங்களிலும் பாதுகாப்புக்கான செலவினங்கள் அதிகமாகவே உள்ளது.
- 2022 - 23ம் நிதியாண்டில் பாதுகாப்பிற்காக ஒதுக்கிய தொகை ரூ.5,25,166 கோடி ஆகும்.

**அரசு மானியங்கள்**

- உணவு, உரம், ஏற்றுமதி, கல்வி உள்ளிட்டவைகளுக்கு அரசு தொடர்ந்து மானியம் அளித்து வருவதால் பொது செலவினங்களானது அதிகமாகவே உள்ளது.
- 2022 - 23 நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டில் அரசு மானியங்களுக்கு ரூ.3.17 இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு

**கடன் சேவைகள்**

- அரசு வெகுவாக உள் மற்றும் வெளி வளங்களிலிருந்து கடன்களை பெற்றுள்ளது.
- 2021-ம் நிதியாண்டில், கடன் சேவைக்கான விகிதம் 8 சதவீதமாக உள்ளது இதுவே 2020-ம் ஆண்டு 6.5 சதவீதமாக இருந்தது.

**நகரமயமாதல்**

- 1951-ல் 17% ஆக இருந்த நகர்ப்புற மக்கள் தொகை தற்போது 43 சதவீதமாக உள்ளது.
- இதன் காரணமாக சட்ட ஒழுங்கு, கல்வி, குடிமை வசதிகள் மீதான செலவினங்களும் அதிகரித்தது.

**தொழில்மயமாதல்**

- தொழில்மயமாதல் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டது அதன் காரணமாக அரசு முதலீட்டினை அதிகப்படுத்தியது.

**12) சமநிலை மற்றும் சமனற்ற வரவு செலவுத் திட்டத்தின் வேறுபாடுகளை விவரி.**

| அம்சங்கள் | சமநிலை பட்ஜெட் | சமநிலையற்ற பட்ஜெட் 6 |
|---|---|---|
| விளக்கம் | திட்டமிட்டதற்கான அரசின் ரசீதும், அரசின் செலவினங்களும் ஒத்துப்போகிறது | திட்டமிட்டதற்கான அரசு ரசீதும், அரசின் செலவினங்களும் சமமாக இருப்பதில்லை |
| பொருளாதார நிலை | நிதி கட்டமைப்பு மற்றும் சமநிலை பட்ஜெட்டிற்கான ஒரு வித்தியாசமான அணுகு முறையாகக் கருதப்படுகிறது | கடன் திரட்சியுடன்கூடிய ஒரு சமநிலையற்ற பட்ஜெட் |

SURESH'

| | | |
|---|---|---|
| பொது நலன் | அரசு பொது நலனுக்காக மேற்கொள்ளும் செலவீனங்களை தடுக்கிறது | பற்றாக்குறையான நிதிநிலையிலும் சமூக நலனுக்காக அதிக தொகை செலவிடப்படுகிறது. |
| பணவீக்கம் | பணவீக்கத்தையோ அல்லது பணவாட்டத்தையோ சமாளிக்க இயலாத சூழல் | தேவைகளை மதிப்பிடுவதன் மூலம் பணவீக்கத்தை சமாளிக்க முடியும் |
| வேலை வாய்ப்பு | குறைந்த வேலை வாய்ப்பு காரணத்தால் வேலைவாய்ப்பு சமநிலையை அடைய முடியவில்லை | பொருளாதார முன்னேற்றத்திற்காக வளங்களை திரட்ட ஒரு பலமான கருவியாக இந்த பட்ஜெட் கருதப்படுகிறது |
| வெளிப்பாடு | ரசீது = செலவினங்கள்;(R)= (E) | R < E – பற்றாக்குறை நிதிநிலை<br>E > E – உபரி நிதிநிலை |

13) **மின்னாளுகைக்கான திறந்த தரநிலை மீதான தேசியக் கொள்கை என்றால் என்ன? விளக்குக.**

**தோற்றம்:** 1

- 2010ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது
- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப அமைச்சகத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது

**நோக்கங்கள்** 1

- பல்வேறு முகமைகளால் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்புகளை சுமூகமான முறையில் இயங்கக்கூடிய தன்மையுடையதாக ஆக்குகிறது.
- பொது தரவுகள் மற்றும் தகவல்களை கைக்கொள்வதற்கான நம்பகமான நீண்ட கால பயன்பாட்டிற்கு வழிவகுக்கிறது.
- இது எண்ணிலக்க முறை நிர்வாகத்திற்கான குறவைான செலவையுடைய ஒரு திட்டமாக விளங்குகிறது

**நடைமுறைத் தன்மை** 1

- தரவு பரிமாற்றத்திற்கும் அனைத்து தளத்திற்குமான தரவும் காப்பகமாக டிஜிட்டல் நிர்வாகத்திற்கு உதவுகிறது
- எதிர்கால நிர்வாக காரணங்களுக்காக வணிகம் உட்பட (G2G, G2B, G2E மற்றும் G2C) அனைத்தும் பயன்பாட்டிற்கு வந்த தேதியிலிருந்து கணக்கில் கொள்ளப்படுகிறது.
- சட்டத்தில் உண்டான புதிய பரிணாமங்களும் மற்றும் ஏற்கனவே இருந்த கட்டமைப்புகளும், திறந்த தரநிலைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

**கொள்கை விளக்கங்கள்** 1

- கொள்கைகளுக்கான குறிக்கோள்களை அடைவதற்கு ஏற்ற உரிமைகளற்ற தரநிலைகளை குறிப்பிட்ட செயல்முறை காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**அறியப்பட்ட தரநிலைகளுக்கான பண்புகளும் திறந்தநிலை தரநிலைகளும்** 2

- அறியப்பட்ட தரநிலைகளுக்கான குறிப்பிட்ட கோப்புகளை பெயரளவு கட்டணத்துடனோ அது இல்லாமலோ பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படுகிறது.
- தனியுரிமைகள் இல்லாத தரவுகளுக்கான தரநிலைகள் அதனுடைய வாழ்நாள் பயன்பாட்டிற்கான அறியப்பட்ட தரநிலைகளுக்கு காப்புரிமை இன்றியமையாதது ஆகிறது.
- அறியப்பட்ட தரநிலைகளை வருவாய் நோக்கம் அல்லாத நிறுவனங்களானது ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறது.
- அனைத்து பங்குதாரர்களும் வெளிப்படைத் தன்மையுடன், இணக்கமான சூழலில் பங்கேற்கின்றனர்.
- பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலான திறந்த நிலையானது எப்போதும் சாத்தியப்படுகிறது.
- இது தொழில்நுட்பத்துடன் கூடிய நடுநிலை விவரக் குறிப்புகளைக் கொண்டது.
- இக்கொள்கை உள்ளூர்மயமாக்கலுக்கு துணைபுரியும் தகுதியுடையது அத்தனை இந்திய அலுவல் மொழிகளுக்கும் அத்தனை பயன்பாட்டு களங்களுக்கும் ஏற்றதாக அமைகிறது.

14) **நேரடி பலன் பரிமாற்ற திட்டம் விவரி?**

**தோற்றம்** 0.5

- ஜனவரி 1, 2013ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்** 1

- அரசின் விநியோகம் முறையை மாற்றியமைத்தல்
- விநியோக முறையில் உள்ள ஊழலை குறைக்கும் முறை
- பயனாளர்களுக்கு தகவல்களும், மானியங்களும் தடையற்ற முறையில் எளிமையாகவும் அதேசமயம் வேகமாகவும் சென்றடைவதற்கான திட்டமாகக் கருதப்படுகிறது.

**DBT-ன் முந்தைய அடுக்குகள்** 0.5

- பொது நிதி மேலாண்மை அமைப்புக்கான (PFMS) அடுத்தக்கட்ட நகர்வே மத்திய அரசு திட்ட மேற்பார்வைக்கான அமைப்பின் (CPSMS) கணக்குகளுக்கான பொதுக் கட்டுப்பாட்டு அதிகாரியும் DBT –க்கான ஒருங்கிணைந்த தளமாக விளங்குகிறது

**DBT-ன் உட்கூறுகள்** 2

- பயனாளர் கணக்கு மதிப்பீட்டு அமைப்பு
- வலுவான கட்டணமுறை

SURESH

- RBI, NPCI பொது மற்றும் தனியார் துறை வங்கிகளின் ஒருங்கிணைந்த தளமாக விளங்குகிறது

**DBT-ன் கீழ் உள்ள திட்டங்கள்** 2

- மொத்தம் 317 திட்டங்களானது DBT-ன் கீழ் செயல்படுகிறது அவையாவன
- பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா
- தேசிய உணவு பாதுகாப்புப் பணி
- நீடித்த விவசாயம் மற்றும் மானாவாரிப் பகுதிக்கான (NMSA) முன்னேற்றத்திற்கான தேசியப்பணி
- பிரதான் மந்திதி க்ரிஷி சிஞ்சாயி யோஜனா
- பிரதமரின் கிசான் திட்டம்
- கால்நடைகளுக்கான தேசியத் திட்டம்
- தூய்மை இந்தியா திட்டம்
- அடல் ஓய்வூதிய யோஜனா

15) **மாநில அரசின் பல்வேறு வகையான நிதிகளை விளக்குக.**

**மாநில அரசின் ஒருங்கிணைந்த நிதி** 2

- இந்திய அரசியலமைப்பின்படி விதி 266-ன்படி மாநில அரசின் ஒருங்கிணைந்த நிதி தோற்றுவிக்கப்பட்டது.
- கருவூல கணக்குகளின் கடன் மற்றும் ஒரு மாநிலத்தின் அனைத்து வருவாய் மூலங்களையும் ஒருங்கிணைந்த நிதி பெறுகிறது.
- உள் மற்றும் வெளி கடன்கள் மற்றும் கடன் திரும்ப செலுத்துதல்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஏற்கிறது.

**மாநில அரசின் பொதுக் கணக்கு** 2

- இந்திய அரசின் பொதுக் கணக்கானது விதி (266(2)ன் படி தோற்றுவிக்கப்பட்டது.
- அனைத்து வகையான பொதுப்பணத்தின் வகையினங்களும் அரசின் சார்பாக மாநில அல்லது மத்திய பொதுக் கணக்கில் போடப்படுகிறது.
- மாநிலத்திற்கான வருங்கால வைப்பு நிதி, தேசிய சிறு சேமிப்பு நிதி, பல்வேறு துறை சார்ந்த நிதிகள், தேசியபாதுகாப்பு நிதி முதலியவை பொதுக் கணக்குகளில் சேமிக்கப்படுகிறது

**மாநில அரசின் தற்செயல் நிதி** 2

- தற்செயல் நிதியானது, மாநில அரசின் கீழ் விதி 267(2)ன்படி ஏற்படுத்தப்பட்டது அரசின் எதிர்பாராத செலவினங்களை எதிர்கொள்ள இது ஆளுநரால் விடுவிக்கப்படுகிறது. **(or table = 6)**

| நிதி | இந்திய அரசின் ஒருங்கிணைந்த நிதி | இந்திய அரசின் தற்செயல் நிதி | இந்தியாவின் பொதுக் கணக்கு |
|---|---|---|---|
| வருவாய் | வரி மற்றும் வரியல்லாத வருவாய் | திட்டமிடப்பட்ட நிதி (2005-ல் இது 50 கோடியிலிருந்து 500 கோடியாக உயர்த்தப்பட்டது) | ஒருங்கிணைக்கப்பட்ட நிதியின் கீழ் உள்ள பொதுப்பணங்கள் |
| செலவினங்கள் | அனைத்து வகையான செலவினங்கள் | எதிர்பாராத செலவினங்கள் | ஒருங்கிணைந்த நிதியின் கீழ் அல்லாத பொதுப் பணம் |
| மாநில சட்டமன்ற அதிகாரம் | செலவினங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது | செலவினங்களுக்கு பின் ஏற்றுக்கொள்ளப்படுகிறது | தேவைப்படுவதில்லை |
| அரசியலமைப்பு விதிகள் | விதி 266(1) | விதி 267(2)ன்படி ஆளுநரின் கீழ் ஏற்படுத்தப்பட்டது | விதி 266(2) |

16) **நல்லவரிவிதிப்பின் முக்கிய கூறுகள் விவரி.**

**அறிமுகம்** 6

- ஆடம் ஸ்மித் எழுதிய நாடுகளின் வளம் என்ற புத்தகத்தில் வரிவிதிப்புக்காக நியதிகளை பரிந்துரைக்கிறது.
- இதுவே வரிவிதிப்புக்கான முதன்மை நியதிகளாக கடைபிடிக்கப்படுகிறது

**திறனுக்கான நியதி**

- மக்களுடைய செலுத்து திறனை ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு வரிவிதித்தல்
- வறுமையுற்றோர் குறைவாகவும் பணம் படைத்தோர் அதிகமாகவும் கட்ட வழிவகை செய்கிறது.

**உறுதி தன்மைக்கான நியதி**

- வரி செலுத்துபவர், வரி வசூலிக்கும் அதிகாரி, மற்றும் வரியின் உறுதித் தன்மையும் அது சரியான
- நேரத்தில் வசூல் செய்யப்படுவதை உறுதி செய்கிறது.

**பொருளாதாரத்திற்கான நியதி**

- வரி வருவாயானது குறைவான தொகையாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்
- அதிக நிர்வாகத்திற்கான தொகை, தாமதமான மதிப்பீடு மற்றும் அதிக வரி வசூலித்தல் உள்ளிட்ட அனைத்தும் நிராகரிக்கப்படுகிறது.

**வசதிகளுக்கான நியதி**

- வசூலிக்கப்படும் வரியானது, அரசுக்கும், வரி செலுத்துபவருக்கும் ஒரு சாதகமான சூழலை உறுதி செய்திடவேண்டும்.

**17) நிதியியல் நிலைத்த தன்மை மற்றும் மேம்பாட்டு குழு என்றால் என்ன?**

**தோற்றம்** 1

- 2010-ம் ஆண்டு அமைக்கப்பட்டது
- இது நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு சட்ட ரீதியான உச்ச அமைப்பு அல்ல.
- 2008ம் ஆண்டு ரகுராம்ராஜன் கமிட்டியின் பரிந்துரையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

**சபை உறுப்பினர்கள்** 1

- தலைவர் – நிதி அமைச்சர்
- உறுப்பினர்கள் – நிதித்துறை கட்டுப்பாட்டாளர்கள்
- RBI, SEBI, IRDA, PFRDA

**FSDC-ன் பொறுப்புகள்** 2

- நிதித்துறையில் ஒரு நிலைத்தன்மையை கொண்டு வருதல்
- நிதித்துறை மேம்பாடு
- ஒழுங்குமுறை அமைப்புகளுக்காக ஒருங்கிணைப்பு
- நிதி குறித்த கல்வியறிவை ஊக்குவித்தல்
- நிதி சேர்த்தலை உறுதிப்படுத்துதல்

**FSDC-ன்செயல்பாடு** 2

- நிதித்துறையில் நிலைத்தன்மை ஏற்படுத்துதல்
- ஒழுங்குமுறை அமைப்புகளுக்கான ஒருங்கிணைப்பு
- நிதி குறித்த கல்வியறிவை வளர்த்தல்
- நிதி உள்ளீடு மற்றும் சீரிய முறையில் பொருளாதாரத்தின் மீதான மேற்பார்வை

**18) சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம் / செயலகம் வரையறை செய்க.**

**GST சபை** 1

- 2016ம் ஆண்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலுடன், 101-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி நடைமுறைக்கு வந்தது.
- 15-க்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றம் ஒப்புதல் அளித்து, பின்னர் குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்தார்.
- இது விதி 279A(1) ன் கீழ் குடியரசுத் தலைவரால் ஏற்படுத்தப்பட்டது.

**GST சபையின் அம்சங்கள்** 2

- தலைமை – மத்திய நிதி அமைச்சர்

**உறுப்பினர்**

- மாநில வருவாய் / நிதி அமைச்சர்
- ஒவ்வொரு மாநிலத்திலிருந்து நிதி அதிகாரம் கொண்ட ஒரு அதிகாரி
- துணைத் தலைவர் – உறுப்பினர்களால் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- முன்னாள் அலுவல் செயலாளர் – வருவாய் துறை செயலாளர்
- நிரந்தர அழைப்பாளர் – மத்திய கலால் மற்றும் வணிகவரித்துறை அதிகாரி. இவருக்கு வாக்குரிமை இல்லை

**வாக்களிக்கும் அதிகாரம்** 1

- மொத்த வாக்குகளில் மத்திய அரசின் வாக்கானது மூன்றில் ஒரு பங்கு என்ற அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- மொத்த வாக்குகளில் மாநில அரசின் வாக்கானது இரண்டில் ஒரு பங்கு என்ற அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**சண்டிகரில் நடந்த சமீபத்திய GST கவுன்சில் சந்திப்பு**

- ஜுன் 28 – 29, 2022ல் 47வது GST சந்திப்பானது சண்டிகரில் நடைபெற்றது.

**GST சபையின் செயல்பாடுகள்** 2

- சபையானது விதி 279-ன் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளை GST தொடர்பான அறிவுறுத்தல்களுக்கு உட்படுத்தி GST -க்கு கீழ் அல்லது விலக்கு பெற்ற பொருட்கள் குறித்து விவரிக்கிறது.
- GST ன் பல்வேறு வரி நிலைகளை நிர்ணயிக்கிறது.
- உதாரணமாக, குதிரைப் பந்தயம், வலைதள விளையாட்டுகள் உள்ளிட்டவைகளுக்கான வரி நிர்ணயமாக 28% ஆக அமைச்சர் குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த முடிவானது சபையில் எட்டப்பட்டது.

**அலகு – 2**

**1) உள்ளாட்சி அமைப்பின் வகைகள், பணிகள் மற்றும் அவற்றின் வருவாய் ஆதாரங்களை எழுதுக.**

**முன்னுரை** 1

- அதிகாரப் பரவலாக்கம் முயற்சியின் பலனாக மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தம் 73 மற்றும் 74-ன் கீழ் உள்ளாட்சி அரசாங்கங்களால் இந்திய அளவில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. இச்சட்டத்திருத்தங்கள் 1992-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது
- உள்ளாட்சி நிதி என்பது இந்திய அளவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியினை குறிக்கிறது.

**உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள்** 1

- இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளானது 4 செயல்பாட்டு நிலைகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவை,

1. கிராம பஞ்சாயத்துகள்
2. மாவட்ட வாரியம் அல்லது ஜில்லா பரிஷத்
3. நகராட்சிகள்

SURESH

4. நகராட்சி நிறுவனங்கள்

**கிராம பஞ்சாயத்து** 1


- இது ஒரு வருவாய் கிராமத்தை உள்ளடக்கியது. சில நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறிய கிராமங்கள் ஒரே பஞ்சாயத்தின் கீழ் கொண்டுவரப்படுகிறது.
- மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் தோற்றுவிக்கப்படுவதை உறுதியான கொள்கையாக பின்பற்றப்படுகிறது.

**செயல்பாடு மற்றும் கடமை** 1

- பஞ்சாயத்து அளவிலான குடிமை மற்றும் பொருளாதார விவகாரங்களைக் கையாள்கிறது. பஞ்சாயத்துக்கான பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண வழிவகை செய்கிறது.
- சாலை, தொடக்கப்பள்ளிகள், மருந்தகங்கள் முதலியவை கிராம பஞ்சாயத்துக்களால் நிர்வகிக்கப்படுகிறது.
- பாசன வசதி மற்றும் குடிநீர் விநியோகம், வணிகம் முதலியன கிராம பஞ்சாயத்துக்களின் கீழ் விடப்படுகிறது.

**வருவாய் மூலங்கள்:** 1

- பொது சொத்து வரி
- நில வரி
- தொழில் வரி
- வாகன வரி மற்றும் செல்லப் பிராணிகளுக்கான வரி
- சேவை வரி, கேளிக்கை வரி, யாத்திரை வரி, திருமண வரி, பிறப்பு மற்றும் இறப்புக்கான வரி முதலிய வரிகள்.
- மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட வரியானது உள்ளாட்சி அரசால் வசூலிக்கப்பட்டு மாநில அரசுக்கு பரிமாற்றப்படுகிறது. 1




| வகைகள் | கட்டுப்பாட்டு எல்லைகள் | செயல்பாடுகள் 6 |
|---|---|---|
| நகராட்சி நிறுவனங்கள் | மிகப்பெரிய நகர்ப்புற பகுதி | பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டமிடல் நம்பகதன்மையுடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். |
| நகராட்சிகள் | சிறிய நகரங்களை நிர்வகித்தல் | நில மேம்பாடு, தண்ணீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை செய்தல். |
| அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கான குழு | வளர்ந்து வரும் நகரங்கள் மற்றும் நகராட்சிக்கான தகுதிகளை பெறவிருக்கும்நகரங்கள். | உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிர்வாகப் பொறுப்பினை ஏற்றல். |
| நகர்புற பகுதிகளுக்கான குழு | சிறிய நகரங்களை நிர்வகிப்பது. | சாலை, கழிவுநீர் கால்வாய், தெருவிளக்கு உள்ளிட்ட வசதிகள். |
| பாளைய வாரியங்கள் | ராணுவம் சார்ந்த குடியியலாளர்களுக்கான நகர்ப்புற நிர்வாகம். | பொது ஆரோக்கியம், நீர் விநியோகம், ஆரம்பக்கல்வி முதலியன. |
| நகர்ப்புறங்கள் | தொழிலாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் மிகப்பெரிய பொது நிறுவனம் | சாலை மற்றும் பொது மேம்பாட்டிற்காக நிர்வாகத்திற்கு துணை நிற்றல். |
| துறைமுக நகரம் | மும்பை, கல்கத்தா போன்ற துறைமுக நகரங்களில் ஏற்படுத்தப்பட்டது. | துறைமுக பாதுகாப்பு மற்றும் குடிமை வசதிகளை ஏற்படுத்தித் தருதல். |
| பரிந்துரைக்கப்பட்ட சிறப்பு முகமை | ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயலுறுத்தும் நடவடிக்கைக்காக ஏற்படுத்தப்பட்டது. | குறிப்பிட்ட பகுதியில் திட்டங்களை செயல்படுத்துதல். |


**2) இந்தியாவில் உள்ள விவசாயத்திற்கான பல்வேறு கடன்கள் பற்றி எழுதுக.**

**முன்னுரை:** 1

- விவசாயக் கடன் என்பது விவசாய மேம்பாட்டு முயற்சிக்கான ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது. முன்னர் இந்திய விவசாயிகள் தங்களது பணத்தேவைகளுக்காக வட்டிக்கு பணம் தருவோரை சார்ந்திருந்தனர்.

**விவசாயக் கடனின் வகைகள்** 1

- பசுமைப் புரட்சியிலிருந்து, இந்த முதலீடானது, விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், விவசாய உபகரணங்களுக்காக செலவிடப்படுகிறது.
- 2022ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் விதமாக கடன் அளிக்கும் விகிதத்தை அதிகப்படுத்தியுள்ளது.




**இந்தியாவில் விவசாயக் கடன்களுக்கான மூலங்கள்**

**1. அமைப்பு அல்லாத மூலங்கள்:** 1

- வட்டிக்கு பணம் தருவோர், வணிகர்கள், தரகர்கள், மற்றும் நிலப்பிரபுக்கள்.

**2. அமைப்பு மூலங்கள்:** 1

- SBI, RBI மற்றும் NABARD உள்ளிட்ட அமைப்பு மூலங்கள்

**வணிக வங்கிகள் மூலம் பெறப்படும் கடன்கள்** 1

- கிராம தத்தெடுப்பு திட்டங்களின் அடிப்படையில் வணிக வங்கியானது குறிப்பிட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்கிறது.
- கந்துவட்டி உள்ளிட்ட பிரச்சினைகளிலிருந்து விவசாயிகளை காக்க ஊரக வங்கிகளுக்கு கடனளிப்பு விகிதங்களை அதிகப்படுத்த வணிக வங்கிகள் துணை செய்கிறது.
- வணிக வங்கிகள் பெரும்பாலும் சிறுவிவசாயிகளுக்கு கடனளிக்க முன் வருவதில்லை.

**அரசிடமிருந்து பெறப்படும் தக்காவிக் கடன்:** 1

- பஞ்சம், வெள்ளம் போன்ற நெருக்கடி காலங்களில் இக்கடன் அரசால் வழங்கப்படுகிறது.
- 1990-91ம் ஆண்டுகளில் குறுகிய கால கடனுக்காக அரசால் ரூ 350 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஊழல் காரணமாக தக்காவி கடன் திட்டமானது விவசாயிகளை சென்றடைவதில் தோல்வியுற்றது.

**கிசான் கடன் அட்டை** 1

- குறுகிய கால கடன் வழங்கலை நோக்கமாகக் கொண்டு இத்திட்டமானது 1998ம் ஆண்டு தொடங்கப்பட்டது
- நிலமுள்ள மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

**வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AMIF):** 1

- 2018ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டமானது, நபார்டு வங்கியின் மூலம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் நிதியுதவியினால் மேம்படுத்தப்பட்டது.

**வட்டி வரையறை திட்டம்** 1

- இத்திட்டம், மானிய வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இது NABARD மற்றும் RBI வங்கிகளால் அறிவிக்கப்பட்டு 2020-21ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**விவசாயக் கடன் குறித்த பிரச்சினைகள்** 1

- விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப கடனளிப்புகள் இல்லாதது.

SURESH

- பண பரிமாற்றங்கள் போதுமானதாக இல்லாதது.
- சிறு விவசாயிகளின் மீதான மிகக்குறைந்த கவனம்
- ஒழுங்கற்ற நிறுவன நீதியான தலையிடல்கள்
- சிவப்பு நாடா தன்மை.

**துடிப்பான விவசாய கடன் வழங்கலுக்கான தீர்வுகள்:** 2

- கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கப்படும் கடன்கள் ஊரக பகுதிகளாக சென்றடைய வேண்டும்
- போதுமான நிதி அளிப்புடன், ஒரு பன்முகச் சமூகமாக மாற்றம் பெற வேண்டும்.
- இடைத்தரகர்களை தவிர்த்தல்.
- நீண்டகால கடனளிப்புக்காக ரிசர்வ் வங்கியானது போதிய அளவில் நிதியுதவி அளிக்க வேண்டும்.
- மகாஜன்தன் மற்றும் வட்டிக்கு பணம் தருவோரின் நடவடிக்கைகளை கண்காணித்தல்
- வங்கிகள், கடன் பெறுவதற்கான நடைமுறைகளை சுலபப்படுத்த வேண்டும்.

**3)) பற்றாக்குறை நிதியாக்கம் என்றால் என்ன? நாட்டின் நிதி கொள்கையில் அவற்றின் தாக்கம் பற்றி விவரிக்க.**

**பற்றாக்குறை நிதியாக்கம்** 2

- இது வருவாய்க்கு அதிகமான செலவினங்களை அரசு மேற்கொள்வதை குறிப்பிடுகிறது.
- இந்த பற்றாக்குறையானது கடன்கள் மூலம் சமன் செய்யப்படுகிறது.
- பணப் பரிவர்த்தனைகளை குறைப்பதற்காக அரசானது, மத்திய வங்கியை புதிய ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கவும், மக்களிடமிருந்து கடனை பத்திரங்களாக வசூல் செய்ய அறிவுறுத்துகிறது.

**பற்றாக்குறை நிதியாக்கத்திற்கான தேவைகள்** 2

- பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான வளங்கள் அல்லாத பொழுது நிதி பற்றாக்குறையை கையாள இம்முறை பயன்படுத்தப்படுகிறது.
- பற்றாக்குறை நிதியாக்கம் என்பது விலையேற்றத்தின் போதும் வளர்ச்சி விகிதம் குறைவாக உள்ள பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- செலவினங்கள் அதிகமாக உள்ள பொழுது அதற்கான தீர்வாக இது விளங்குகிறது.
- உற்பத்தியல்லாத காரணிகள் மீது செலவு செய்தல் மற்றும் முன்னேற்றமல்லாத நடவடிக்கைகள் மீது முதலீடு செய்தல் ஆகியவை பற்றாக்குறை நிதியாக்கத்திற்கான தேவையை அதிகப்படுத்துகிறது.

**அரசு கடனுக்கான தொகைகள் கீழ்க்கண்ட வழிமுறைகளில் பெறப்படுகிறது.** 2

- பொது மற்றும் வெளிநாட்டு அரசிடமிருந்து பண உதவிகளை பெறுதல்.
- ரிசர்வ் வங்கியுடனான பண நிலுவைகளை திரும்பப் பெறுதல்
- ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெறுதல்

**பற்றாக்குறை நிதியாக்கத்தின் தாக்கங்கள்** 3

**நேர்மறையான தாக்கங்கள்**

**1. மத்திய அரசிடமிருந்து கடன் பெறுதல்**

- அரசு பொதுவாக மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறுகிறது.
- அதற்கு திருப்பி செலுத்தப்படும் வட்டியானது லாபமாக அரசையே பின்பு வந்தடைகிறது.

**2. மேம்பாட்டிற்கான முடுக்கம்**

- வளங்களானது தேவைக்கு முன்னரே, மதிப்பிட்டு பயன்படுத்தப்படுவதால் எந்தவித தடையும் இன்றி பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலமாக இயங்குகிறது.

**3. முன்னேற்றப்பாதையில் நாடு**

- அரசின் நிதிநிலையை வலுப்படுத்துகிறது, பொருளாதார முன்னேற்றம் பெருக்கமடைகிறது.
- இது குறைந்த வேலையுடைய மற்றும் வேலையற்ற வளங்களை உபயோகிக்க அரசை ஊக்குவிக்கிறது.

**எதிர்மறை தாக்கங்கள்** 3

**1. பணவீக்க சூழ்நிலைகள்**

- இது பொருட்கள் மற்றும் சேவைக்கான விலையேற்றத்தை ஏற்படுத்துகிறது.
- வங்கிகளின் கடன் அளிப்புகளை அதிகப்படுத்துகிறது.
- பணவீக்கமானது ஒரு சுய தோல்வியாக கருதப்படுகிறது.

**2. வருவாய் ஏற்றத்தாழ்வுகள்**

- நிலையான வளங்களை கொண்ட தனிமனிதர்கள் இதன் மூலம் ஆதாயம் அடைவதில்லை.
- இது ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுக்கிறது.
- உட்கட்டமைப்பு மற்றும் எந்திரங்கள் உள்ளிட்ட வளங்களின் குறைபாட்டால் குறைவான வேலைவாய்ப்பே ஏற்படுத்துகிறது.

**முடிவுரை**

- பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தொடர்பு முயற்சிகளை மேற்கொள்வதால், பற்றாக்குறை நிதியாக்கம் ஒரு சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.
- தற்போது உள்ள நிதி தொடர்பான செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத ஒரு செயல்முறையாக இது உள்ளது.

**4) மின்ஆளுகையின் உட்தொடர்புகளின் வகைகளை விளக்குக.**

**விளக்கம்** 1

- மின் ஆளுகை என்பது, அரசு சேவைகள், தகவல் பரிமாற்றம், பரிமாற்றங்கள், ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த சேவைகள் மற்றும் தரவுத் தளங்களை தகவல்

மற்றும் தொலைத்தொடர்பு ICT உதவியுடன் ஒருங்கிணைப்பது ஆகும்.

**மின்ஆளுமை தொடர்பின் வகைகள்** 1

- 4 வகையான தொடர்புகள் கடைபிடிக்கப்படுகின்றன, அவை

1. G2G (அரசிடமிருந்து அரசுக்கு)
2. G2C (அரசிடமிருந்து குடிமக்களுக்கு)
3. G2B அரசிடமிருந்து வணிகத்திற்கு)
4. G2E (அரசிடமிருந்து பணியாளர்களுக்கு)

**G2G** 2.5

- அரசின் செயல்முறை மற்றும் செயல்பாடுகளை மறுசீரமைப்பு செய்ய மட்டுமல்லாது பல்வேறு நிறுவனங்களிலான தகவல் சேவைகளை மேம்படுத்தவும் ICT மூலம் வழிவகை செய்கிறது.
- இத்தொடர்பானது ஒரு நிறுவனத்தின் பல்வேறு படிநிலைகளை ஒருங்கிணைக்கிறது.
- இது இருவேறு அரசு முகமைகளுக்கு இடையே, ஒரு நிறுவனத்தில் உள்ள இருவேறு செயல்படும்பகுதிகளுக்கு இடையே தனி பிரதேசத்திற்கும் உள்ளாட்சி அரசு முகமைகளுக்கும் இடையே செயல்படுகிறது.
- திறன் மற்றும் செயல்பாட்டை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது.
- உதாரணம் : பூமி திட்டம், கர்நாடக அரசை சேர்ந்த கஜானே திட்டம்

**G2C** 2.5

- இது அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான தொடர்பு ஆகும்.
- பொது சேவை அளிப்புகளை பெறுவதற்கான பயனாளர்களை இத்தொடர்பு ஊக்குவிக்கிறது.
- பொது சேவைகளுக்கான அணுகுதலையும் பயன்பாட்டையும் விவரிக்கிறது.
- சேவையின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டது.
- அரசாங்கத்தை, ஒரு குடிமக்களுக்கான அரசான மாற்றுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது.

**G2B** 2.5

- மின் ஆளுகையானது வணிகப்பிரிவை பலப்படுத்துவதற்கான ஒரு முறையாகும்.
- இது அரசுக்கும் வணிகப் பிரிவினருக்கும் ஒரு தடையற்ற வணிகத்தை ஏற்படுத்தித் தருகிறது.
- அரசுடன்கூடிய, வெளிப்படையான வர்த்தகச் செயல்பாட்டிற்கு, செயல்முறைச் செலவையும் அதற்கான காலத்தையும் குறைப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டது.
- உரிமம், அனுமதி, கொள்முதல் மற்றும் வருவாய் வசூலிப்பு உள்ளிட்ட பரிவர்த்தனைகளை மேற்கொள்கிறது.- வணிகம், சுற்றுலா, முதலீடு தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்து, அதற்கான செயல்முறையை சுலப்படுத்துகிறது.- உ தா ர ண மா க மின் ஒப்பந்தம்.

**G2E** 2.5

- ஒரு நிறுவனத்தைச் சார்ந்த மிகச்சிறந்த பணியாளருடனான அரசின் தொடர்பை விவரிக்கிறது.
- நிறுவனத்துக்கும் பணியாளருக்கும் இடையிலான இருமுனை நடவடிக்கையாக கருதப்படுகிறது.
- ICT உபகரணங்களின் உதவியுடன் ஒரு வேகமான தொடர்பை உறுதிப்படுத்துகிறது.
- அதே சமயம் சம்பந்தப்பட்ட பணியாளரையும் திருப்திப்படுத்துகிறது.-உதாரணம் : மின் ஊதியம், மின் – பயிற்சி

5) **தகவல் தொழில்நுட்பத்திற்கான தேசியக் கொள்கை – 2012 பற்றி விளக்குக.**

**முன்னுரை**

- தேசிய கொள்கையானது, இரண்டு எல்லைகளை அடைவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அவை
- இந்திய நாட்டை ICT இன் மொத்த அதிகாரங்களைக் கொண்டு பலப்படுத்துதல்
- 2020க்குள் இந்தியாவை உலக அரங்கில் தகவல் தொழில்நுட்பத்தின் சிறந்த எல்லையாக நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

**முதன்மை அம்சங்கள்** 12

1. **ஏற்றுமதி மற்றும் வருவாயை அதிகரித்தல்**

- 100 பில்லியன் டாலரிலிருந்து 300 பில்லியன் டாலராக தகவல் தொழில்நுட்பத் துறையின் வருவாயை பெருக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- 2020க்குள் ஏற்றுமதியை 69 பில்லியன் டாலரிலிருந்து 200 பில்லியன் டாலராக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டது.
- தொழில்நுட்பம் மற்றும் சேவைகளில் குறிப்பிட்ட அளவிலான முன்னேற்றத்தை உலகச் சந்தையில் ஏற்படுத்துதல்

2. **உற்பத்தி பெருக்கம்**

- தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர்மயமாக்கத்திற்கான தீர்வுகள், முன்னேற்ற நடைமுறைகள், மதிப்புக் கூட்டு சேவைகள், வலைதளங்கள் உள்ளிட்டவற்றை ஊக்குவித்தல்
- போட்டித்தன்மை மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்காக, பொருளாதார செயல்முறை வியூகங்களை ICTஐ கொண்டு அமைத்தல்

- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் நிதி சார்ந்து துணைநிற்பது மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்புகளை ஊக்குவித்தல்

**3. திறமையான மனிதவளம் மற்றும் மின்கல்வியினை உருவாக்குதல்**

- ICT இல் 10 மில்லியன் கூடுதல் திறம்படைத்த மனிதவளத்தை உருவாக்குதல்
- வீட்டிற்கு ஒருவரையாவது டிஜிட்டல் முறையில் கல்வி பெற்றவராக ஆக்குதல்
- தொடர் கல்வி மற்றும் வேலைத்திறனை மேம்படுத்துதல்

**4. பொது சேவைக்கான எளிதான அணுகுமுறை**

- பொது மின்னணு சேவைகளின் பயன்பாட்டை அனைவருக்கும் கொண்டு சேர்த்தல்
- வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்றல், வேலைத்திறன், சுமூகமான அணுகுமுறை, உள்ளூர்மயமாக்கல் ஆகிய செயல்முறைகளை குறிப்பாக பொது சேவைக்கான விநியோகத்தை மேம்படுத்துதல்
- ICT இன் மூலம் மேற்கொள்ளும் சமூக நல முன்னெடுப்புகளை கல்வி, ஆரோக்கியம், ஊரக முன்னேற்றம், நிதி சேவைகள் ஆகியவற்றின் சமத்துவத்தையும் தரத்தையும் பேணுதல்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான சுய முன்னேற்றத்திற்காக ஒரு எளிமையான பயன்பாட்டுச் செயல்முறையை உறுதி செய்கிறது.

**5. எண்ணிலக்கத்தில் இந்தியா**

- மொழி சார்ந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், அனைவரும் இந்திய மொழிகளை எளிதில் புரிந்து அணுகுவதற்கான சூழலை எண்ணிலக்க முறை கொண்டு மெய்ப்பித்து இந்தியாவை உலக அரங்கிற்கு உயர்த்துதல்

**6. பாதுகாப்பான கட்டமைப்பை உறுதிப்படுத்துதல்**

- சுழற்சி மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பை பலப்படுத்தி ஒரு இணக்கமான மின்வெளி சுற்றுச்சூழல் அமைப்புக்கு வழிவகை செய்தல்.
- திறந்த நிலை தரநிலைகள், தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவற்றை ஆதரித்து ஊக்குவித்தல்
- உதாரணம் : தகவல் பாதுகாப்பு கட்டமைப்பை நிறுவுதல்

**6) இந்திய நீதித்துறையை டிஜிட்டல் மயமாக்குதல் பற்றி எழுதுக.**

**முன்னுரை** 1

- கோவிட் – 19 கட்டுப்பாடுகளே நீதிமன்றங்களை டிஜிட்டல்மயமாக்குவதற்கான உந்துதலாக அமைந்தது.
- காட்சி காணொளி வாயிலாக தொடர் அவசர கூட்டங்களும் நீதிமன்ற அவைகளும் உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற நீதித்துறை அமர்வுகள் நடந்தது.
- பழைய கோப்புகளை பாதுகாப்பதற்கும் நிலுவையிலுள்ள வழக்குகளை முடிக்கவும் டிஜிட்டல்மயம் என்பது ஒரு பொன்னான வாய்ப்பாக கருதப்படுகிறது.

**நீதித்துறையில் தொழில்நுட்பத்தின் வருகை** 2

- 1990களின் பிற்பகுதியில் மின் – ஆளுகையானது நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இது தகவல் மற்றும் தொழில்நுட்பச்சட்டம் 2000 மூலம் முடுக்கம் பெற்றது.
- 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடு தழுவிய அளவில் டிஜிட்டல் நீதிமன்றங்கள் நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 2006ஆம் ஆண்டு தேசிய மின் ஆளுகை திட்டத்தின் கீழ் டிஜிட்டல் நீதிமன்றங்களானது நிறுவப்பட்டது.

**நீதித்துறையை டிஜிட்டல்மயமாக்குவதற்கான நடவடிக்கைகள்** 3

**1. வழிகாட்டும் உதாரணமான அலகாபாத் உயர்நீதிமன்றம்**

- ஏறத்தாழ ஒரு கோடி வழக்குகளுக்கான கோப்புகளை ஒரே ஆண்டில் அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியாகிய D.Y.சந்திரசூட் அவர்கள் டிஜிட்டல்மயமாக்கினார்.

**2. டிஜிட்டல்மயமாக்கலில் உச்சநீதிமன்றம்**

- காணொளி காட்சி வாயிலாக விவாகரத்து வழக்குகளை கையாள்வது குறித்த முன்னெடுப்பு ஹரீஸ் நாகம் எதிர் கிருஷ்ணவேணி நாகம் (2017) வழக்கில் மேற்கொள்ளப்பட்டது.
- இதற்கான வழிகாட்டுதல் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- 2018 முதல் வழக்கு விசாரணைக்கான நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான அனுமதியை உச்சநீதிமன்றம் உச்சநீதிமன்றம் வழங்கியது.
- ஸ்வப்னில் த்ரிபாதி எதிர் உச்சநீதிமன்றம் 2018, வழக்கில் இம்முறை பின்பற்றப்பட்டது.
- அரசியலமைப்பு மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் இம்முறை பின்பற்றப்படுகிறது.
- இந்த நேரடி ஒளிபரப்பு முறையானது அரசு நீதித்துறையின் வெளிப்படைத்தன்மையையும், திறந்த நிலை செயலாற்றும் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

**3. குஜராத் உயர்நீதிமன்றம் – நேரடி ஒளிபரப்பு**

- நாட்டிலேயே வழக்கு விசாரணை மற்றும் தீர்ப்பினை அனைவரும் அறியும் அளவிற்கு நேரடி ஒளிபரப்பு செய்யும்முறை குஜராத் உயர்நீதிமன்றமே முதன்முதலில் செயல்படுத்தியது.
- பின்னர் இது கர்நாடகா, ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் பாட்னா உள்ளிட்ட மாநில உயர்நீதிமன்றங்களால் பின்பற்றப்பட்டது.

SURESH

**4. டிஜிட்டல் – நீதிமன்றம்**

- நீதித்துறையின் செயல்பாடுகளை பலப்படுத்தும் முயற்சியாக தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் அடிப்படையில் இயங்கும் டிஜிட்டல் நீதிமன்றங்களை நாட்டின் சட்ட அமைச்சர் நடைமுறைப்படுத்தினார்.
- நீதித்துறை களத்தில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும் முயற்சியாக, இந்திய உச்ச நீதிமன்றமானது ஒரு செயற்கை நுண்ணறிவுக் குழுவினை ஏற்படுத்தியுள்ளது.

**நீதித்துறையில் டிஜிட்டல்மயமாக்குவதற்கான தேவைகள்** 3

**1. ஆவணங்கள் பாதுகாப்புச் சிக்கல்கள்**

- ஆவணங்களை சேகரிப்பதற்கான மிகப்பெரிய இடத்தையும் அதன் பராமரிப்பையும் தொடர்ந்து மேற்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன.

**2. விடுதலை பெற்ற குற்றவாளிகளுக்கான ஆவணங்கள்**

- ஆவணங்களானது டிஜிட்டல் முறையில் சேகரிக்கப்படும்போது அதை தேடி ஒடுக்கு முறையானது சுலபமாக உள்ளது.
- ஆவணங்கள் தொலைந்து போவதற்கான சாத்தியங்கள் இதில் மிகக் குறைவு
- பழைய வழக்குகளில், விடுதலை பெற்ற நிறைய, குற்றவாளிகளின் ஆவணங்கள் தொலைந்து போனதை அறியமுடிகிறது.

**3. தாமதமாகும் வழக்குகள்**

- கீழ்நிலை நீதிமன்றங்களிலிருந்து குறிப்பிட்ட வழக்குகளுக்கான ஆவண பரிமாற்றமே தாமத்திற்கான மிக முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

**நீதித்துறையை மின்மயமாக்குவதில் உள்ள சவால்கள்**

**1. இணைப்பு இடையூறுகள்** 3

- வலைதள இணைப்பில் ஏற்படும் இடையூறுகள் மற்றும் வழக்கை எதிர்கொள்வதற்கான போதிய உபகரணங்கள் இல்லாதது போன்றவை முக்கிய பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

**2. டிஜிட்டல் கல்வியறிவு**

- நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் நீதிமன்ற பணியாளர்களும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் போதிய அறிவு பெறாது இருத்தலை குறிக்கிறது.

**3. தனியுரிமை கருத்து**

- முன்னேற்ற பாதையில் இருக்கும் டிஜிட்டல்மயமாக்கலில், நீதிமன்ற ஆவணங்களும் தனியுரிமை காரணமாக பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்களில் நீதித்துறையானது முதன்மையாக உள்ளது.

**4. ஊடுருவல் மற்றும் மின் வெளி பாதுகாப்பு**

- தொழில்நுட்பம் வளர்ந்து வரும் அதே நேரத்தில் பாதுகாக்கப்பட்ட ஆவண தளங்களில் ஊடுருவலும் அதிகமாக உள்ளது.
- இதனை முதன்மை சவாலாக எடுத்துக் கொண்டு அதனை சரிசெய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

**7) பின்வருவனற்றை விளக்குக:**

**a) பொதுச்சேவை மையங்கள் 2.0**

**b) தமிழ்நாட்டின் டிஜிட்டல் நூலகம்**

**a) பொதுச் சேவை மையங்கள் 2.0**

**தொடக்கம்** 1

- 2015ஆம் ஆண்டு நிறுவப்பட்டது
- அமைச்சகம் : தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம்

**முன்னுரை** 1

- நாடு முழுவதும் அத்தனை கிராம பஞ்சாயத்துகளுக்கும் CSC ஐ விரிவடையச் செய்தல்
- 2.5 லட்சம் மக்களுக்கு ஒரு CSC ஆனது நிறுவப்பட வேண்டுமென்று கிராம பஞ்சாயத்து அளவில் கருதப்பட்டது.

**முக்கியக் கூறுகள்** 4

- CSC 2.0 ஆனது தொழில்முனைவோருக்கான சேவை அடிப்படையிலான பயிற்சியை ஒவ்வொரு குடிமக்களுக்கும் வழங்க முனைகிறது.
- இந்த முயற்சியானது டிஜிட்டல் மாவட்டம், SWAN, SSDG, SDC, NOFN / Bharat Net ஆகியவற்றின் உட்கட்டமைப்பை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

**CSC தொடக்கம்**

- CSC 2006ஆம் ஆண்டு தேசிய மின்ஆளுகை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- இது மின் ஆளுகை திட்டத்தின் சிறந்த பங்களிப்பை அளிக்கிறது.
- இந்த திட்டமானது தனியார் துறையையும் அரசு அல்லா அமைப்புகளை பொது சேவை மையங்கள் அமைக்க ஊக்குவிக்கிறது.

**CSC இல் பொது மற்றும் தனியாரின் பங்களிப்பு**

- இத்திட்டமானது 3 அடுக்கு முறைகளை பரிந்துரைக்கிறது.
- CSC யினை இயக்குபவர் (கிராமத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர்)
- சேவை மைய முகமை (SCA) – 500 முதல் 1000 மையங்களுக்கான பொறுப்பேற்கிறது.
- மாநில நியமன முகமை (SDA) – மாநிலம் முழுவதும் அமைப்பதற்கான பொறுப்பினை ஏற்கிறது.

**CSC மற்றும் டிஜிட்டல் இந்தியா**

- CSC, டிஜிட்டல் இந்தியா நோக்கங்களில் 3 பகுதிகளில் செயலாற்றுகிறது.
- அனைத்து குடிமக்களும் பயன்படும் வகையிலான டிஜிட்டல் உட்கட்டமைப்பு
- நிர்வாகம் மற்றும் தேவைக்கான சேவைகள்
- குடிமக்களுக்கு டிஜிட்டல் முறையில் அதிகாரமளித்தல்

**b) தமிழ்நாட்டின் டிஜிட்டல் நூலகம்** 6

**1. தமிழிணையம்**

- டிஜிட்டல் நூலகம் என்பது, 18ஆம் நூற்றாண்டு முதல் சமயம், இலக்கியம், வரலாறு, அறிவியல் முதலியவற்றை உள்ளடக்கிய புத்தகங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவை பாதுகாக்கப்படுகின்றன.
- 50000 புத்தகங்களுக்கு மேற்பட்ட தெற்காசிய மொழி. புத்தகங்களை கொண்ட மிகப்பெரிய டிஜிட்டல் நூலகமாகும்.

**2. ஓலைச் சுவடிகளை டிஜிட்டல்மயமாக்குதல்**

- அரசு ஏறத்தாழ 1.05 கோடி ஒதுக்கீட்டில் ஓலைச் சுவடிகளை டிஜிட்டல்மயமாக்கி அட்டவணைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**3. டிஜிட்டல் நூலகத்தின் உட்கூறுகள்**

- அரசு 1 கோடி மதிப்பீட்டில் கண்பார்வை குறைபாடு உடையவர்களும் டிஜிட்டல் நூலகத்தை பயன்படுத்தும் வகையில் கட்டமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. தமிழர் தகவலாற்றுப்படை**

- தமிழ் மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த தளமாக தகவலாற்றுப் படை விளங்குகிறது.
- தமிழ் வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான 31158 படங்களை கொண்டிருக்கிறது
- கலைப்பொருட்கள் மற்றும் வரலாற்று தகவல்கள் மேலும் சேர்க்கப்பட்டு தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**முடிவுரை**

- தமிழ் டிஜிட்டல் நூலகமானது 10,00,000 அதிகமான நூலகப் பட்டியலைக் கொண்டுள்ளது.
- 5000க்கும் மேற்பட்ட நூல்கள் டிஜிட்டலில் சேமிக்கப்பட்டிருக்கிறது.
- இது மாணவர்களை ஊக்கப்படுத்தி பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான பயன்பாட்டை அதிகரிக்கிறது.

**8) பின்வருவனற்றை விளக்குக:**

**a) தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்**

**b) தமிழ்நாடு பைபர் வலையமைப்பு**

**c) தமிழ்நாடு இணையக்கல்வி நிறுவனம்**

**a) ELCOT** 1

- இந்திய தொழிற்சாலைச் சட்டம், 1956இன் கீழ் மாநில அரசால் நிர்வகிக்கப்படுகிறது.
- இது தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் என்ற பெயரில் மார்ச் 21, 1977ஆம் ஆண்டு சென்னையில் பதியப்பட்டு அதன் செயல்பாட்டை தொடங்கியது.
- அலுவலக பணிகளுக்காக மின்னணு சாதனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒரு அரசு முகமையாக விளங்குகிறது.

**இதர பணிகள்:** 3

**மின்னணு தகவல் பலகை:**

- வணிகத்திற்கான பொருளை பற்றி காணொளி வாயிலாக விளக்குவதற்கான ஒரு உபகரணமாக விளங்குகிறது.

**கண்காணிப்பு கருவி:**

- தலைமைச் செயலக நடவடிக்கைகளை நாள் முழுவதும் கண்காணிப்புக்கு உட்படுத்துகிறது.

**காணொளி காட்சி:**

- மே 2016 முதல் ஜீன் 2019 வரை, 197 சமூக நலத் திட்டங்களை காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.

**மின்னணு கடிகாரம் மற்றும் வலைபின்னல் மேம்பாடு:**

- மின்னணு கடிகாரமாது, தமிழ்நாடு சட்ட மன்றங்களில் உள்ள அனைத்து கடிகாரங்களின் துல்லியத் தன்மையை மேம்படுத்த உதவுகிறது.

**மின்னணு வருகைப் பதிவேடு:**

- செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்கும் உட்கரணங்களைக் கொண்டு வருகைப் பதிவேடு செய்யப்படுகிறது.

**E- Procurement (இணைய கொள்முதல்)**

- தமிழ்நாடு மின் ஆளுகை முகமையில் கீழ் தேவையான மின்னணு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. அதற்கான ஒப்பந்தங்கள் (https:// tntenders.gov. in) என்ற வலைதளம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**மின்னணு வகுப்புகள்:**

- இவ்வகுப்புகளானது (2D/3D) அமைப்புகளைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

**b) தமிழ்நாடு பைபர் வலையமைப்பு:** 2

- அதிக அலைவரிசை கொண்ட பாரத் நெட் திட்டம் அனைத்து ஊரக பகுதிகளையும் இணைக்க வழிவகை செய்கிறது.
- மத்திய அரசின் உதவியுடன் மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

SURESH

**சிறப்பு அம்சங்கள்:** 1

- 12524 கிராம பஞ்சாயத்துக்களும் 1 Gbps அலைவரிசையை இத்திட்டம் வழங்குகிறது.

**நடைமுறைப்படுத்துதல்:** 1

- தமிழ்நாட்டில் பாரத் நெட் – 11 திட்டத்தை கண்காணிக்க மாநில செயல்பாட்டுக் குழு (SLIC) உருவாக்கப்பட்டுள்ளது.
- மாநில அரசின் அதிகாரிகளுடன் இணைத்து பாரத் தொலைத்தொடர்பு வலைபின்னல் அதிகாரிகளும், USOF அதிகாரிகளும் இணைந்து பணியாற்றுகின்றனர்.

**c) தமிழ் இணையம்:** 1

- தமிழ்நாடு தொலைத்தொடர்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு வலைபின்னல் கழகம் (TANFINET) ஆகியவை தமிழ் இணைய மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கு கொள்கின்றனர்.

**தமிழ்நாடு மெய்நிகர் கலைக்கூடம் (TVA)**

**தொடக்கம்:** 1

- கூட்டுறவு சங்க பதிவுச் சட்டம் 2000ன் அடிப்படையில் தமிழ்நாடு மெய்நிகர் பல்கலைக்கழகத்தில் சென்னையில் நிறுவப்பட்டது.
- 2010-ல் தமிழ்நாடு மெய்நிகர் கலைக்கூடம் என்று பெயர் மாற்றப்பட்டது.

**நோக்கங்கள்:** 1

- வலைதளம் வாயிலாக உலகின் எந்த மூலையில் இருந்தும் மாணவர்கள் தமிழ் கற்பதை ஊக்குவிக்கிறது.
- ஆங்கிலத்திற்கு அடுத்தப்படியாக, வலைதளம் வாயிலாக கற்பிக்கப்படும் ஒரே மொழி தமிழ் ஆகும்.

**அம்சங்கள்:** 1

- உலகில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் தமிழர்களுக்கான வாய்ப்பினையும், வளங்களையும் தமிழ் பல்கலைக்கழகம் ஏற்படுத்தித் தருகிறது.
- வலைதளம் வாயிலாக தமிழ் மொழியின் வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை விளக்குகிறது.
- தமிழ்நாடு மெய்நிகர் பல்கலைக்கழகமானது, அறிய புத்தகங்கள், ஓலைச்சுவடிகள், அறிய இதழ்கள், புகைப்படங்கள், காணொளி தொகுப்புகள் ஆகியவற்றை டிஜிட்டல் முறையில் தருகிறது.

**சேவைகள்: மின்- நூலகம்:**

- தமிழ் வலைதள கலைக்கூடம் இதனை உருவாக்கியது.

**கணினி தமிழ்:**

- தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியின் வாயிலாக கணினித் தமிழ் ஆராய்ச்சியை தமிழ் மெய்நிகர் கலைக்கூடம் ஊக்குவிக்கிறது.

**தகவலாற்றுப்படை:**

- பழமையான, அகழ்ந்தெடுத்த பொருட்கள், பொறிப்புகள், வழிபாட்டுத் தலங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், தொல்லியல் அடையாளங்கள், ஓவியங்கள் உள்ளிட்டவைகளின் படங்களானது 70,600 புகைப்பட கலைஞர்களால் எடுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.
- வரலாறு பற்றிய ஒருமித்த கருத்தை இது உருவாக்குகிறது.

**மின்னாக்கம் செய்யப்பட்ட கையெழுத்து பிரதி:**

- கிட்டத்தட்ட 4,15,708 கையெழுத்துப் பிரதிகள் அட்டவணைப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**தமிழ் கலைக்களஞ்சியம் திட்டம்:**

- தமிழ் வலைதள கலைக்கூடமானது தமிழ் குறித்த தகவல்களை ஒருங்கிணைத்து வழங்குகிறது.
- 84,000 அதிகமான தமிழ் கட்டுரைகள் விவசாயம், மீன்பிடித்தல், வேதியியல், உயிரியல், இயற்பியல் உள்ளிட்ட தலைப்புகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**9) நகராட்சி அமைப்புகளின் பணிகள் யாவை? மற்றும் இதன் பல்வேறு வருவாய் ஆதாரங்களை பட்டியலிடுக.**

**நகராட்சிகள்:** 1

- குறிப்பிட்ட பகுதியை சார்ந்த மக்கள் நலனுக்காக, உள்ளாட்சி அரசின் நிர்வாகப் பிரிவாக, ஒரு அரசியல் பிரிவாக நகராட்சி விளங்குகிறது.

**அரசியலமைப்பு அதிகாரம்:** 1

- நகராட்சி அமைப்பானது விதி 74 – ன் கீழ் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 1992 – ன் படி உருவாக்கப்பட்டது. இந்த பிரிவானது பகுதி IX A- ல் சேர்க்கப்பட்டு ஜீன் 1, 1993ல் இருந்து நடைமுறைக்கு வந்தது.

**நகராட்சியின் கடமைகள்:** 2

- பொது ஆரோக்கியம், சாலை, தெருவிளக்கு, தண்ணீர் விநியோகம், பூங்கா மற்றும் தோட்டம் பராமரித்தல், மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள், கழிவுநீர் மேலாண்மை, தொடக்கக் கல்வி, பொருட்காட்சி, உள்ளிட்டவைகளை நகரப்பகுதிகளில் செயல்படுத்த ஏற்படுத்தப்பட்ட ஒரு உள்ளாட்சி அமைப்பு ஆகும்.
- நகராட்சிகள் இவ்வேலைகளை மேற்கொண்டாலும் இதன் கட்டுப்பாட்டு அதிகாரம் மாநில அரசையே சாரும்.

**நகராட்சியின் வருவாய் மூலங்கள்:** 2

- மாநில அரசு சட்டத்தின் படி நகராட்சிகளால் வசூலிக்கப்படும் வரி மற்றும் கட்டணங்கள்.
- மாநில அரசால் வசூலிக்கப்பட்டு நகராட்சிகளும் பகிர்ந்து அளிக்கப்படும் வரி, கட்டணங்கள்.

- மாநில அரசால் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் உதவி மானியங்கள்.
- அரசு தொடர்பாக நகராட்சிகள் மேற்கொள்ளும் பண பரிவர்த்தனைகள்.

**வரி வருவாய்:** 6

- சொத்து வரி
- பொருட்களுக்கான வரி, முனைய வரி
- வணிக வரி, தொழில் வரி
- கேளிக்கை வரி

**தமிழக அரசின் வரி அதிகரிப்பு:**

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் கீழ் அனைத்து நகராட்சிகளுக்கான சொத்து வரியும் தமிழக அரசால் உயர்த்தப்பட்டது.

**குடியிருப்புச் சொத்து:**

- இது நகராட்சிகளுக்கும், டவுண் பஞ்சாயத்துக்களுக்குமானது.
- 600 சதுர அடிக்கு குறைவான சொத்துக்கான வரி 25% அதிகரிக்கப்பட்டது.
- (601 - 1200) சதுர அடிக்கு - 50% சதவீதம் சொத்து வரி உயர்த்தப்பட்டது.
- (1201 - 1800) சதுர அடிக்கு - 75% சதவீதம் சொத்து வரி உயர்த்தப்பட்டது.
- 1800 சதுர அடிக்கு மேல் - 100% சதவீதம் சொத்து வரி உயர்த்தப்பட்டது.

**குடியிருப்புப் பகுதி அல்லாத சொத்து:**

- வணிக நிறுவுதலுக்கான 100% சொத்துவரி அதிகரிக்கப்பட்டது.
- நகர்ப்புறங்களில் காலிமனைகளுக்கான வரி 100% உயர்த்தப்பட்டது.
- அரசு உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் பள்ளி, கல்லூரிகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு 75% சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது.

**10) நம்பிக்கை இணையம் என்றால் என்ன? அதன் வளர்ச்சிப் பற்றி விவாதி.**

**முன்னுரை:** 2

- எல்லோரும் கையாளக்கூடிய, மீள்தன்மையுடைய, நம்பிக்கையான ஒரு தளமாக அரசு சேவைகளுக்காக கட்டமைக்கப்பட்டது.
- மாநிலந்தழுவிய அளவில் அனைத்து துறைகளையும் தொடர்புபடுத்தக்கூடிய ஒரு உட்கட்டமைப்பை கொண்டது.

**அமைப்பு முறை:** 2

- இந்தத் தளமானது ஒரு கலப்பு கட்டமைப்பை கொண்டது.
- இம்முறையானது தனியார் அல்லது மாநிலக் குழு ஆகியவற்றை சார்ந்தது.
- அரசு மற்றும் தனியார் துறை, முகமை மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான ஒரு தளமாக விளங்குகிறது.
- ஒரு பாதுகாப்பான உட்கட்டமைப்பை வணிகத்திற்கு செயல் நிரலாக்க தொடர்பை (API) ஏற்படுத்துகிறது.

**அம்சங்கள்:** 5

- பொது நிறுவுதல், தனியார் துறை, பரிமாற்றங்கள், பாதுகாப்பான செயல் முறைகள், உள்ளிட்ட அரசு துறைகளுக்கான ஒரு துடிப்பான செயல்பாட்டுத் தளமாக திகழ்கிறது.
- அரசு சேவைகளின் தடையற்ற பயன்பாட்டை உறுதி செய்கிறது.
- இக்கட்டமைப்பின் மூலம்G2G மற்றும் G2C ஆகிய பொருட்கள் சேவை வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- சட்டம் தொடர்பான தளங்களை பெருக்குதல், நடைமுறையில் உள்ள தொழில்நுட்ப முறை கட்டமைப்புக்கு பதிலாக மாற்றம் இல்லாது ஒரு முறையை பரிந்துரைத்தல்.
- அரசில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள செயல்முறை மற்றும் தொகுதிகளுக்கு பதிலாக பாதுகாப்பான மற்றும் துடிப்பான முறையை பரிந்துரைக்கிறது.
- ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசு செயல்முறைகளை முற்றிலும் மாற்றியமைத்து நம்பகமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

**கீழ்கண்ட ஆவணங்களை பாதுகாப்பதற்காக நம்பிக்கை இணையமானது பயன்படுகிறது** 3

- இந்து மதம் மற்றும் தொண்டு நிறுவனங்கள்
- நிலம் தொடர்பான ஆவணங்கள்
- கல்வி தொடர்பான சான்றிதழ்கள்
- மதிப்பெண் சான்றிதழ்கள்
- இ - சேவை மையத்தால் வழங்கப்பட்ட சான்றிதழும், உரிமங்களும்
- விவசாயத் துறையால் அளிக்கப்படும் விதைக்கான சான்றிதழ்கள்
- அரசால் கைவினை பொருட்களுக்கு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள்

**11) இந்தியாவின் நிதி ஆணையம் பற்றி விரிவாக எழுதுக.**

**தொடக்கம்:** 1

- விதி 280 - அரை நீதித்துரை அமைப்பான நிதிக்குழுவை ஏற்படுத்துதல்.
- 1951 - ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

**முன்னுரை:** 1

- மத்திய மற்றும் மாநில அரசுக்கும் இடையிலான நிதி தொடர்பான உறவுகளை குறிக்கிறது.

- இரு மாநில அரசுகளுக்கு இடையே அல்லது மத்தய மாநில அரசுகளுக்கு இடையே நிதி சமமின்மையை குறைக்கிறது.
- இது உள்ளடக்குதலை ஏற்கிறது.

**பதவிக்காலம்:** 1

- 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிதிக்குழு ஏற்படுத்தப்படுகிறது.
- பதவிக்காலம் முடிவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன் புதிய குழு அமைக்கப்படுகிறது.
- 15 - வது நிதிக்குழுவானது நவம்பர் 2017 - ல் அமைக்கப்பட்டது. இதன் பரிந்துரைகள் ஏப்ரல் 2020, நடைமுறைப்படுத்தப்பட்டது.

**அமைப்பு:** 5


- தலைமை: பொது விவகாரத்தில் அனுபவம் வாய்ந்தவராக இருக்கிறார்.
- 4 உறுப்பினர்கள்-உறுப்பினர் தகுதிகளையும் மற்றும் தேர்வு முறைகளையும் பாராளுமன்றம் நிர்ணயிக்கிறது.

**நிதிக் குழுவின் செயல்பாடுகள்:**

- மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான வரி பங்கிடுகள், மாநிலங்களுக்கான ஒதுக்கீடுகளையும் நிர்ணயம் செய்கிறது.
- மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் மானியம் பற்றியும், அந்த மானியத்திற்கான மாநிலங்களின் தகுதிகள் பற்றியும் விதி 275 (1) விவரிக்கிறது.

**வரி எவ்வாறு பிரிக்கப்படுகிறது:** 2

- விதி 280, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான வருவாய் பங்கீட்டினை மேற்கொள்ள நிதிக்குழுவிற்கு ஆணையிடுகிறது.
- கடன் தள்ளுபடி, பேரிடர் கால நிதி, கூடுதல் மானியங்கள் ஆகியவற்றை மேற்கொள்ள நிதிக்குழுவிற்கு குடியரசுத் தலைவர் அறிவுறுத்துகிறார்.




**நிதிக் குழுவின் ஆலோசனை வழங்கும் அதிகாரம்:**

- நிதிக்குழுவின் ஆலோசனைகள் அரசை கட்டப்படுத்தாது. நிதிக்குழு மாநிலங்களுக்கான மானியங்களுக்கு அரசிடம் பரிந்துரைக்கலாம்.
- அரசியலமைப்பின் எந்தப் பகுதியிலும் நிதிக்குழுவின் ஆலோசனைகளுக்கு அரசு கட்டுப்பட வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை.
- நிதிக்குழுவானது பரிந்துரைகளை மட்டும் வழங்குகிறது.

**15- வது நிதிக்குழுவின் முக்கியத்துவம்:** 2

- கூட்டாட்சியின் அடிப்படையில் நிதித்துறையில் நிறைய சீர்த்திருத்தங்கள் மேற்கொண்ட பொழுது 15 வது நிதிக்குழுவானது பொறுப்பேற்றது.
- திட்டக்குழுவிற்கு பதிலாக நிதி ஆயோக் பரிந்துரைக்கப்பட்டது
- திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத செலவினங்கள் ஒழிக்கப்படுகிறது.

**12) இந்தியாவில் மின்னாளுகையை செயல்படுத்த உள்ள பல்வேறு சவால்களை விளக்குக.**

**முன்னுரை:** 1

- IT பற்றிய அறிவு இல்லாமையே பெரிய தடையாக கருதப்படுகிறது.
- 2021 - ம் ஆண்டு, வலைதளம் பற்றிய புரிதலும் மின்னாளுகையின் கீழ் பணி செய்ய தகுதி பெற்ற நாடுகளின் பட்டியலில் 120 நாடுகளில் இந்தியா 29வது இடம் பெற்றது.

**மின்னாளுகையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள்:** 3

**தொழில்நுட்ப சவால்கள்:இயங்கக்கூடிய தன்மை:**

- அமைச்சகங்களுக்கும் அந்தந்த துறைகளுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களுக்கும், செயல்பாடுகளுக்கும் தடையாக உள்ளது.

**பாதுகாப்பு:**

- அரசின் பலசேவைகள் பாதுகாப்பின்மை காரணமாக பெரிதும் பயன்படத்தப்படவில்லை. வலைதள பரிவர்த்தனைகளும் செயல்முறைகளும் நம்பகமானதாக இல்லை.

**தனியுரிமை:**

- மின் ஆளுகையில் அனைத்து தரவுகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இல்லையேல், அது ஒரு தனிநபராலோ அமைப்புகளாலோ தவறாக பயன்படுத்தக் கூடும்.

**அங்கீகாரம்:**

- ஒரு சேவைக்கான சரியான பயனாளரை கண்டறிவது அவசியமாகிறது. இதைக் கண்டறிவதில் டிஜிட்டல் கையொப்பமானது முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இது அதிக செலவுடையதாகவும், தொடர் பராமரிப்பையும் கொண்டதாக அமைகிறது.

**பொருளாதார பிரச்சினைகள்:** 3

**தொகை:**

- இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் அதிகப்படியான மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் காரணத்தால் மின்னாளுகை முறையை நடைமுறைப்படுத்துவதில் முதன்மைத் தடையாக செலவினங்கள் உள்ளது.

**பராமரிக்கக்கூடிய தன்மை:**

- தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பத்தில் காலத்திற்கு ஏற்றபடி புதுப்பிப்பதில் சிக்கல்கள் நிலவுகிறது.
- தொடர் பராமரிப்பே இதன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.
- இதன் விளைவாக அரசு, டிஜிட்டல் இந்தியா திட்டத்தை நடைமுறைப்படத்தியது.

**சமூக சிக்கல்கள்:** 3

**குறைந்த தகவல் தொழில்நுட்ப அறிவு:**

- இந்தியாவில் பெரும்பாலான மக்கள் கல்வியறிவு பெறவில்லை.
- அப்படி கல்வியறிவு பெற்றவர்களுக்கும் IT பற்றிய புரிதல் இருப்பதில்லை.

**மொழிக் கட்டுப்பாடு:**

- பல்வேறு மொழிகள் பேசும் மக்களை உள்ளடக்கியது நம் நாடு. மின்னாளுகையில் முழுமையும் ஆங்கிலத்தையும் கொண்டுள்ளது. எனினும் ஆங்கிலம் மக்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

**சேவை ஒருங்கிணைப்பில் பின்னடைவு:**

- மத்திய மற்றும் மாநில அரசின் நிறைய மின்னாளுகை திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை.
- அரசு துறைகளுக்கு இடையிலான தகவல் தொடர்பில் உள்ள பின்னடைவு முக்கிய பிரச்சினையாக கருதப்படுகிறது.

**விழிப்புணர்வின்மை:**

- மக்கள் நேரடியாக மின் ஆளுகையை பயன்படுத்தாமல் இடைதரகர்களை நாடுவது மக்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பற்றிய விழிப்புணர்வு இல்லாததையே குறிக்கிறது.

**முன்னேற்றப்பாதைகள்:** 2

- வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத்துக்கு ஏற்ற வகையில், இந்திய அரசானது குடிமக்களுக்கு மின்னாளுகை வாயிலாக சேவைகளை வழங்குகிறது.
- படிப்பறிவின்மை, பாதுகாப்பு, செலவு உள்ளிட்ட நடைமுறைச் சிக்கல்கள் இருந்தபோதிலும் மின் ஆளுகையானது இந்தியாவில் பிரபலமடைந்து வருகிறது.
- டிஜிட்டல் இந்தியா, இ – க்ராந்தி போன்ற பல்வேறு முன்னெடுப்புகளை அரச மேற்கொள்கிறது.
- அரசானது வெளிப்படைத்தன்மை, எளிமையான அணுகுமுறை, செலவுக்குறைப்பு ஆகியவற்றை மின் ஆளுகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

**அலகு – 3**

**1) தமிழக அரசின் சமீபத்திய வேளாண் பட்ஜெட் பற்றி விளக்குவதுடன் மற்றும் அதன் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.**

**முன்னுரை:** 1.5

- தமிழக அரசானது வேளாண் பட்ஜெட்டில் 2021 – 22 –ஆம் ஆண்டில் 32,775.78 கோடி ஒதுக்கியது. அதைவிட, அதிகமாக 2022 – 23 ஆம் ஆண்டில் 33,007.68 கோடி நிதி ஒதுக்கியது.
- இது ஒருங்கிணைந்த மேம்பாட்டை கவனத்தில் கொண்டு வேளாண் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர் செல்வம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. இது தி.மு.க அரசடைய 2 வது வேளாண் பட்ஜெட் ஆகும்.

**நோக்கங்கள்:** 1.5

- 2022 – 23 ஆம் ஆண்டில் 126 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.
- பருவநிலை மாற்றத்திற்கு துணைநிற்றல் மற்றும் பயிர் பல்வகைப்படுத்துதலை ஊக்குவித்தல்.
- தினை மற்றும் பருப்பு வகை பயிரிடுதல் ஊக்குவிக்க அரசின் சிறப்பு திட்டங்கள்.
- வறண்ட பகுதிகளின் விவசாயத்தை ஊக்கவிக்க நிலத்தடி நீர்வளத்தை பெருக்குதல், நிர் சேகரிப்பு அமைப்புகளை ஊக்குவிக்க திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

**வேளாண் பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள்:** 11

1. **ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP)**

- 2022 – 23 ல் 300 கோடி பட்ஜெட் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
- அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் ஒரு முழுமையான முன்னேற்றத்தை உறுதி செய்தல்.
- அனைத்து கிராம அண்ணா மறுலர்ச்சி திட்டம் வாயிலாக ஒவ்வொரு வருடமும், ஊரக மேம்பாட்டு துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளால் அடையாளம் காணப்பட்ட கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- முதல் வருடத்தில் இந்தத் திட்டம் 1997 கிராமப் பஞ்சாயத்துகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இவ்விரு திட்டங்களும் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**2. ஒத்துழைப்பு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு:**

- 2351 கோடி மதிப்புள்ள விவசாயக் கடனும், 1000 கோடி மதிப்புள்ள நகைக்கடனும், 600 கோடி மதிப்புள்ள சுய உதவிக் குழுக்களின் கடன்களும் மொத்தம் ரூ. 4131 கோடி மதிப்புள்ள கடன்கள் இந்த பட்ஜெட்டில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**3. புதிய பயிர்களுக்கான கடன்:**

- இந்த நிதியாண்டில் இதுவரை 14,15,916 விவசாயிகள் ரூ. 9773 கோடி மதிப்புள்ள புதிய பயிர்களுக்கான கடனாக பெற்றுள்ளனர்.
- ரூ. 7,428 கோடி மதிப்புள்ள கடனை 10,76,096 சிறு மற்றும் விளிம்புநிலை விவசாயிகள் பெற்றுள்ளனர்.
- ரூ. 200 கோடி மதிப்புள்ள தொகை வட்டியில்லா பயிர்க்கடனாக வழங்கப்படுகிறது. இது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ஒரு முன்னோடி திட்டமாக விளங்குகிறது.

**4. உணவுக்கான மானியம்:**

- பொது விநியோக திட்டத்தின் கீழ் ரூ. 7500 கோடி மதிப்புள்ள தொகை உணவுக்கான மானியமாக வழங்கப்பட்டது.
- ரூ. 13,176.34 கோடியானது கூட்டுறவுத்துறைக்கும், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கும் ஒதுக்கப்பட்டது.

**5. பயிர் காப்பீட்டுத் திட்டம்:**

- மாநில அரசு ரூ. 2329 கோடி ஒதுக்கியது.
- நடப்பு ஆண்டில் 9.26 லட்சம் விவசாயிகள் ரூ. 2055 கோடியை பயிர் காப்பீடாக பெற்றுள்ளனர்.
- 20,000 விவசாயிகளைக் கொண்டு 200 ஏக்கர் பரப்பளவில் பாரம்பரிய விதைகள் பயிரிடப்படுகிறது.
- மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாவட்ட மற்றும் மாநில அளவில் தினை திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

**6. டிஜிட்டல் முறையில் விவசாயம்:**

- பயிர் விளைச்சல், சேதம், மண் வளம், உள்ளிட்டவற்றை பாதுகாக்க புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்படுகிறது.
- செயற்கை நுண்ணறிவு மூலம் தீர்வு காணுதல் மற்றும் பயிரை தாக்கும் நோய்களுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்டவைகளுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- விதைகளை இணையம் மூலமாக வாங்குதலை பயிரிடுவதற்கான தாமதத்தை கட்டுப்படுத்துகிறது.

**7. தமிழ்நாடு இயற்கை விவசாயத் திட்டம்:**

- பாசன வசதிக்கான 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. நீர்நிலைகளை புனரமைத்தல்:**

- நடப்பு ஆண்டில் ஏரி மற்றும் குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளை புனரமைப்பதற்காக ரூ. 2787 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- காவிரி டெல்டா பகுதியிலுள்ள நீர்நிலைகளை புதுப்பித்து அதன் தேக்கு திறனை உறுதிபடுத்த உள்ளிட்ட செயல்பாடுகளுக்காக ரூ. 3,384 கோடி விரைவில் ஒதுக்கப்படவுள்ளது.

**9. DRIP – II**

- சாத்தனூர், சோழியார், மேட்டூர் மற்றும் பாபநாசம் உள்ளிட்ட 64 முதன்மை அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கான திட்டமாகும்-இந்த திட்டமானது உலக வங்கி மற்றும் ஆகிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) உதவியுடன் ரூ. 1064 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.-இ ந் த திட்டத்திற்காக ஆண்டு பட்ஜெட்டில் 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**10. தூர்வாரும் திட்டம்**

- தூர்வாரும் சாகுபடிக்காக காவிரியின் கடைநிலைவரை நீர் சென்றடைய இத்திட்டம் வழிவகை செய்கிறது.
- இதற்காக 4964 கி.மீ தூரத்திற்கு 80 கோடி செலவில் 10 டெல்டா மாவட்டங்களை கடந்து கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது.
- பாசனத்திற்காக மேட்டூர் அணை திறக்கப்படும் முன் இத்திட்டமானது செயல்படுத்தப்படுகிறது.
- நீர்வளத்துறைக்கு இத்திட்டத்திற்காக ரூ7338.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. கால்நடை பராமரிப்பு**

- கைவிடப்பட்ட மற்றும் காயமுற்ற செல்லப் பிராணிகளுக்காக அரசு அல்லாத அமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில் வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.
- அரசு இத்திட்டத்திற்காக 20 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**12. மற்ற சிறப்பம்சங்கள்**

- கரும்பு விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதத்தில் சர்க்கரை உற்பத்தியை மேம்படுத்துதல்
- 3000 சூரிய தகட்டின் மூலம் இயங்கும் பம்ப் செட் அமைக்கப்பட்டது.
- பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த 10 லட்சம் பனை விதைகள் விநியோகிக்கப்பட்டது.
- எந்திர பயன்பாட்டிற்காக 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- பாரம்பரிய பயிரிடுதலை மீட்டெடுக்க, ரூ 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

SURESH

- கரும்பு விவசாயிகளை ஊக்கப்படுத்த 1 மெட்ரிக் டன் உற்பத்திக்கு ரூ 195 ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.
- இதன் மூலம் 1.2 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பருப்பு பயிரிடலுக்கான சிறப்பு மண்டலத்தை ஏற்படுத்துதல்
- மயிலாடுதுறையில் 75 லட்சம் மதிப்பில் மண் பரிசோதனை நிலையங்கள் அமைத்தல்

**<u>முடிவுரை</u>** 1

- விவசாய பட்ஜெட் 2022 - 23 உணவு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.
- தொழில்நுட்ப முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில் மாநில விவசாயத்துறையும் மற்ற சமூக நல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

**2) மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே உள்ள நிதி உறவுகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக**

**<u>அரசியலமைப்புடனான நிதி தொடர்புகள்</u>** 1

- பகுதி XIIல் விதி 268 - 293

**<u>வரிவிதிப்பு அதிகாரங்கள்</u>** 2

- மத்திய அரசின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட 13 இனங்களில் ஒன்றிய அரசு விரிவிதிக்கிறது.
- மாநில அரசின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட 18 துறைகளுக்கு மாநில அரசு வரி விதிக்கும் அதிகாரம் பெற்றது.
- பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றம் ஆகிய இருவரும் பொதுப்பட்டியலில் வரி விதிக்கும் அதிகாரம் பெற்றவர்களாவர்.
- எஞ்சிய துறைகளில் வரிவிதிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்தை சாரும் (சொத்து வரி, அன்பளிப்பு வரி முதலியன)
- அரசியலப்பானது பாராளுமன்றத்துக்கும் மற்றும் மாநில சட்டமன்றத்துக்கும் வரி விதிப்பில் தனித்துவமான அதிகாரத்தை வழங்குகிறது.

**<u>மாநிலத்தின் வரிவிதிப்பு கட்டுப்பாடுகள்</u>** 3

- மாநில சட்டமன்றமானது, தொழில்வரி, வணிகவரி உள்ளிட்ட வரிகளை விதிக்கலாம்.
- ஆனால் மாநில அரசு விதிக்கலாம். (நாளிதழ் தவிர்த்தது)
- விநியோகம் மற்றும் சேவைகள் மீதான வரியை மாநில சட்டமன்றம் விதிக்கலாம்.
- மாநில எல்லைக்கு வெளியில் மேற்கொள்ளப்படும் வாங்குதல் மற்றும் விற்கும் பொருட்கள் மீத வரி விதிக்க முடியாது.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மாநிலங்களுக்கு இடையிலான வணிகம் ஆகியவற்றிற்கு பாராளுமன்றம் வரி விதிக்கும் அதிகாரம் பெற்றது.
- மின்சார உபயோகம் மற்றும் விற்பனை மீது மாநில சட்டமன்றம் வரி விதிக்க அதிகார ம் பெற்றது.
- தண்ணீர் மீதான வரி மற்றும் மினடசார சேமிப்பு, விநியோகம் பகிர்வு ஆகியவற்றில் வரிவிதிக்க பாராளுமன்றம் அதிகாரம் பெற்றது.

**<u>வரி வருவாய் பகிர்வு</u>** 1

**<u>1. 80ஆவது சட்டத்திருத்தம் 2000</u>**

- 10ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகளுக்கு வலுச் சேர்க்கிறது.
- மத்திய அரசின் மொத்த வரிவருவாயில் 29% மாநில அரசுகளுக்கு சென்றடைகிறது.
- அதிகாரப் பகிர்வுக்கான ஒரு மாற்றுத் திட்டமாக கருதப்படுகிறது.
- ஏப்ரல் 1, 1996 முதல் நடைமுறைக்கு வந்தது.
- நிறுவன வரி மற்றும் சுங்கவரி, வருமான வரிக்கு இணையானது.

**<u>2. 88ஆவது சட்டத்திருத்தம் 2003</u>**

- சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மத்திய அரசால் விதிக்கப்பட்டு அந்தந்த மாநில அரசால் வசூலிக்கப்படுகிறது.

**<u>3. 101ஆவது சட்டத்திருத்தம் - 2016</u>**

- சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பொது வரி விதிப்பு அதிகாரம்
- விதி 268இன்கீழ் பெரும்பாலான மறைமுக வரிகளை மாற்றியமைத்தது.

**<u>இரு சட்டத்திருத்தங்களுக்கு பின்பான தற்போதைய நிலை</u>** 2

- விதி 268 - மத்திய அரசால் விதிக்கப்பட்டு, மாநில அரசால் வசூலிக்கப்பட்டு கையகப்படுத்தப்படுகிறது ஆகும்.
- விதி 269 - மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மாநில அரசுக்ளுக்கு ஒதுக்கப்படும் நிதி – நாளிதழ் தவிர்த்த பிற பொருட்களின் விற்பனை
- விதி 269 A - மாநிலங்களுக்கு இடையிலான வணிகத்திற்கு விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி.
- விதி 270 - மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநிலங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.
- விதி 271 - மத்திய அரசினால் விதிக்கப்படும் கூடுதல் வரிகளை பற்றி கூறுகிறது.

- மாநில அரசால் வரி விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மற்றும் தக்கவைக்கப்படுகிறது.

**வரி அல்லாத வருவாய் விநியோகம்** 1

**மத்திய அரசு**

- தபால் மற்றும் தந்தி, ரயில்வே
- வங்கி, ஒளிபரப்பு, நாணயம் மற்றும் பணம். மத்திய பொதுப் பிரிவு நிறுவனங்கள்
- இறையுறு சொத்து (உரிமையாளர் இல்லாத சொத்துக்கள்)

**மாநில அரசு**

- பாசனம், காடுகள், மீன்வளம்
- மாநில பொதுப்பிரிவு நிறுவனங்கள் மற்றும் இறையுறு சொத்துக்கள்

**மாநிலத்திற்கான மானியங்கள்** 2

**1. சட்டரீதியான மானியங்கள்**

- நிதி தேவைகள் ஏற்படும்பொழுது மாநிலங்களுக்கான மானியங்களை ஒதுக்க மத்திய அரசுக்கு விதி 275 அதிகாரம் அளிக்கிறது.
- ஒவ்வொரு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினில் வித்தியாசம் காணப்படலாம்.

**2. விருப்ப மானியங்கள்**

- பொதுப் பயன்பாட்டுக்காக மானியங்களை ஏற்படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு விதி 282 அதிகாரம் அளிக்கிறது.
- மாநிலங்களுக்கு அதன் திட்டங்களை நிறைவேற்ற நிதியுதவி அளிக்கிறது.
- தேசிய திட்டச் செயல்பாடுகளை முடுக்கிவிடுவதற்காக மாநில அரசை ஒருங்கிணைத்தல்

**3. இதர மானியங்கள்**

- சணல் மற்றும் சணல் பொருட்களுக்கான ஏற்றுமதி செய்யும் அசாம், பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுகிய கால மானியமாகும்.

**சரக்கு மற்றும் சேவை வரிக்கான சபை** 1

- சரக்கு மற்றும் சேவை வரி
- விதி 279 ஆனது சபையை அமைக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டமர்வே இத்துறையாகும்.

**நிதிக்குழு** 1

- விதி 280, நிதிக்குழுவிற்கு அரை நீதித்துறை அமைப்பாக விவரிக்கறது.
- ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் குடியரசுத் தலைவரால் அமைக்கப்படுகிறது.
- குடியரசுத் தலைவரிடம் பரிந்துரைப்பதற்கான அடிப்படைத் தேவைகளில் சில.

1. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான வருவாய் பகிர்வுகள்
2. மத்திய அரசால் மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நிர்வகித்தல்
3. தொகுப்பு நிதியினை பெருக்கி பஞ்சாயத்து மற்றும் நகராட்சி வளங்களை மேம்படுத்த துணை செய்தல்
4. குடியரசுத் தலைவரின் விருப்ப அதிகாரத்தின்கீழ் செலவு செய்யப்படும் நிதி.

**மாநிலத்தின் மீதான வட்டிக்கடன்** 0.5

- குடியரசுத் தலைவரின் பரிந்துரையின்பேரில் மட்டுமே மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.
- மாநில அரசின் ஒப்புதலுடன் மசோதாவில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- மாநிலங்களுக்கு இடையில் பகிரப்படும் நிதியின் மீதான மசோதா
- மத்திய அரசுக்காக ஏற்படுத்தப்பட்ட கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள் மீதான மசோதா

**மத்திய அரசின் கடன் பெற்ற உரிமை**

- மத்திய அரசானது இந்திய நாட்டிற்குள் அல்லது தொகுப்பு நிதிக்காக அல்லது உத்தரவுகளை அளிக்கிறது.
- இதற்கான வரம்பு பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

**மாநில அரசு கடன் பெறுதல்** 0.5

- இந்தயாவிற்குள் தொகுக்கப்பட்ட நிதியின் பாதுகாப்புகளின் மீது அல்லது சட்டமன்ற அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளின் மீது உத்திரவாதம் அளிப்பதன் பேரில் பெறப்படுகிறது.
- மத்திய அரசானது எந்த மாநிலத்திற்கும் உதவிக்கடன் அளிக்கலாம்.
- இதற்கான தொகை அனைத்தும் தொகுக்கப்பட்ட நிதியிலிருந்து பெறப்படுகிறது.
- மத்திய அரசின் அனுமதி பெறாமல் மாநில அரசு கடன் பெற இயலாது.

**முடிவுரை**

- இந்தியா அதிகாரங்களை மத்திய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்து ஒரு கூட்டாட்சி அரசாக செயல்படுகிறது.
- மத்திய அரசாங்கம் அதிக அதிகாரம் பெற்றதாகவும், மாநில அரசு குறைந்த அதிகாரங்களை பெற்றிருப்பதாலும் இது ஒரு அரை கூட்டாட்சி நாடாக கருதப்படுகிறது.

- நிதி வளங்களைப் பெறுவதற்காக மாநில அரசுகள் மத்திய அரசின் கைகளையே எதிர்நோக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

3) **நாட்டின் நிர்வாகத்தில் மின்னாளுகையை மேம்படுத்தி எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை விளக்குக**

**<u>மின்னாளுகையின் தொடக்கம்</u>** **0.5**

- மின்னணுவியல் துறையானது 1970ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- தேசிய தகவல் மையம் (NIC) 1977இல் நிறுவப்பட்டது.
- நாடு தழுவிய அமைப்புகளை நிறுவி அனைத்து அலுவலக நடவடிக்கைகளையும் டிஜிட்டல்மயமாக்கும் முயற்சி ஆகும்.
- 1987ஆம் ஆண்டு NICNET ஐ நிறுவியது மின்னாளுகைக்கான மிகப்பெரிய உந்துதலாக பார்க்கப்பட்டது.

**<u>மின்னாளுனையின் வெவ்வேறு பரிணாமங்கள்</u> 2**

- மென்பொருள் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப தேசிய பணிகளுக்கான படை 1998ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- தகவல் தொழில்நுட்பத்திற்கான அமைச்சகம் 1999ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- 12 அம்சங்கள் அடங்கிய மின்ஆளுகைக்கான அமைச்சகங்களிலும் துறைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்காக 2000ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்டது.
- தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
- தகவல் தொழில்நுட்பத்தை இந்தியாவில் மேம்படுத்துவதற்கான பொதுத் திட்டமாக, மாநிலங்களுக்கான தேசிய மாநாட்டினை தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் 2000ஆம் ஆண்டில் ஒருங்கிணைத்தது.
- ஒரு புத்திகூர்மையான அரசுக்கான தேசிய நிறுவனம் 2002இல் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டது.

**<u>மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்</u>**

- கீழ்க்கண்ட மின்னாளுகை திட்டங்களை மாநில அரசு கையாள்கிறது. **4**

**<u>1. இ-சேவை (ஆந்திரப்பிரதேசம்)</u>**

- ஊரகப் பகுதிகளில் வாழும் குடிமக்கள், இரு குடிமகன்களுக்கு இடையிலான அல்லது குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலான டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அணுகுவதற்கான கருவியாக உள்ளது.

**<u>2. பூமி (கர்நாடகா)</u>**

- ஊழலை தடுக்க மற்றும் தரவுகளை எளிமையாக கையாளவும் அத்தனை நிலம் தொடர்பான தரவுகளை டிஜிட்டல் முறையில் சேமித்தல்.

**<u>3. GYANDOOT (மத்தியப் பிரதேசம்)</u>**

- ஊரகப் பகுதி மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.
- சாதாரண மக்களுக்கும், மாவட்ட அரசுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக இது உள்ளது.

**<u>4. LOKVANI (உத்திரப் பிரதேசம்)</u>**

- அத்தியாவசிய தேவைகள் மற்றும் நிலம் தொடர்பான தரவுகளை மேம்படுத்த மின்னாளுகைக்கான தீர்வுகளுடன் ஒரு ஒற்றைச் சாளர அமைப்பை தோற்றுவிக்கிறது.

**<u>5. FRIENDS (கேரளா)</u>**

- நீண்ட நேர காத்திருப்புகளை தவிர்த்து அனைத்து வகையான அரசு தொடர்பான பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் ஒரு ஒற்றைச் சாளர அமைப்பாக விளங்குகிறது.

**<u>6. e-Mitra (ராஜஸ்தான்)</u>**

- அத்தியாவசியத் தேவைகளின் துரித விநியோகம்

**<u>தேசிய மின்னாளுகைத் திட்டம் (NeGP)</u>** **2**

- 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- MMP - 27 செயல்முறை திட்டங்கள் மற்றும் & துணை கருவிகள்
- பின்னர் 2011இல் 4 புதிய திட்டங்கள் இணைக்கப்பட்டது. (ஆரோக்கியம், கல்வி, பொது விநியோகம், தபால்)
- இ-சன்சத், இ-விதான், விவசாயம் 2.0, தேசிய புவியியல் தகவல் அமைப்பு முதலியன.

**<u>E-Kranti</u>**

- தேசிய மின்னாளுகை திட்டம் 2.0 - 44 திட்டங்களையும் 8 துணைக் கருவிகளைக் கொண்டது.
- 44 திட்டங்களும்

1. மத்திய திட்டம் (13)
2. மாநில திட்டம் (17)
3. ஒருங்கிணைந்த திட்டம் (14)

**<u>மின் ஆளுகை தரவுகளின் மீதான தேசியக் கொள்கை</u>**

- நவம்பர் 2010, அறிவிக்கப்பட்டது.

**<u>குறிக்கோள்</u>**

- மின்னாளுகைக்கான தீர்வுகளை நடைமுறைப் படுத்துவதற்காக சீரான, நிலையான வழிகாட்டுதல்களைத் தருகிறது.

**<u>தகவல் தொழில்நுட்பத்திற்கான தேசியக் கொள்கை</u>**

- 2012ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.
- குடிமக்கள் தொடர்பான பிரச்சினைகளில் பொருளாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வு காணும் முயற்சியாக தகவல் மற்றும் தொலைத் தொடர்புத் துறையில் கவனம் செலுத்துதல்

**இணைய பாதுகாப்பிற்கான தேசியக் கொள்கை**

- 2013ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.
- பாதுகாப்பான இணைய வெளி குடிமக்களுக்கும், அரசுக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

**டிஜிட்டல் இந்தியா – 2015** 2

- நாட்டின் அறிவார்த்தமான மாற்றத்திற்கான ஒரு அமைப்பாக உள்ளது.
- நிறைய வியூகங்களையும் சமூக முன்னேற்றத்திற்கான நகர்வுகளையும் ஒற்றை விரிவான பார்வையில் தெளிவுபடுத்துகிறது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் நிறுவப்பட்டது.

**நோக்கங்கள்**

- அனைத்து குடிமக்களுக்கான டிஜிட்டல் கட்டமைப்பு
- அத்தியாவசிய நிர்வாகம் மற்றும் சேவைகள்
- குடிமக்களுக்கான டிஜிட்டல் தளத்தில் அதிகாரமளித்தல்

**டிஜிட்டல் இந்தியா முயற்சிகள்** 4

**1. MyGov**

- அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான தேவைகளை சந்தித்து ஒரு நல்ல நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல்

**2. Digi clocker**

- மின்னணு முறையில் அணுகுவதற்கு ஏற்ற வகையில் தரவுகளை பாதுகாப்பான முறையில் சேமிக்கவும் பகிரவும் ஒரு தளத்தை ஏற்படுத்தித் தருகிறது.

**3. இ-மருத்துவமனை வலைதள பதிவு கட்டமைப்பு**

- அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான அனுமதியை வலைதளம் வாயிலாக பெறும் முறை ஆகும்.

**4. தேசிய உதவித் தொகைக்கான தளம்**

- அனைத்து மாணவர்களுக்கான உதவித்தொகை திட்டங்கள் உபயோகம் மற்றும் பகிர்வுக்கான பொதுத் தளமாக உள்ளது.

**5. DARPAN**

- முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை மேற் பார்வையிடுவது மற்றும் ஆய்வு செய்வதற்கான ஒரு வலைதள உபரகணமாக உள்ளது.

**6. PRAGATI**

- இது வெளிப்படைத்தன்மையை காட்டும் ஒரு வலுவான அமைப்பாக உள்ளது.
- இது ஒரு மாற்றத்திற்கான ஒரு அமைப்பாக பங்குதாரர்களால் 2015இல் நிறுவப்பட்டது.

**முடிவுரை** 0.5

- மின்னாளுகை ஒரு சிறப்பான இடத்தை அடைந்துள்ளது.
- ஆனால் அதை பற்றிய விழிப்புணர்வு இல்லாமையே முக்கிய பின்னடைந்து உள்ளது.
- எதிர்காலத்தில் அதிவேக செயல்பாடு கொண்ட வலைதள அமைப்பு மற்றும் நாடு முழுவதுமான தொழில்நுட்பம் ஆகிய இரண்டையும் சார்ந்தே மின்னாளுகை நகர்கிறது.

**4) மின்னாளுகையின் பல்வேறு பயன்களைப் பட்டியலிடுக**

**மின்னாளுகையின் நன்மைகள்:** 15

**1. அரசு சேவைகளை குடிமக்களுக்கு கொண்டு சேர்த்தல்**

- சமூகத்தின் அனைத்து தளங்களிலும் தொழில் நுட்பத்தின் மூலமாக பெறப்படும் பொருளாதாரத்தின் முன்னேற்றத்தின் நன்மைகளை பரப்புதல்.
- குடிமக்களை மையப்படுத்திய திட்டங்கள் பாதுகாப்பாக, திறமையான முறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அரசு நடவடிக்கையானது மெருகூட்டப் படுகிறது. எ.கா: இ-சேவா, இ-மாவட்டம் முதலியன.

**2. வணிகத்திற்கும், தொழிற்சாலைக்கும் இடையே மேம்படுத்தப்பட்ட தொடர்பு**

- G2B தொடர்பில் பொருட்கள் மற்றும் சேவைக்களுக்கான அத்தனை கொள்முதல்களும் தகவல் தொழில்நுட்பத்தை சார்ந்தே அமைகிறது. எ.கா: இ-ஒப்பந்தம்.

**3. தரவுகளை அணுகுவதில் குடிமக்களுக்கு அதிகாரமளித்தல்**

- குடிமக்களுக்கான டிஜிட்டல் அறிவை வளர்த்தெடுத்தல் மற்றும் சேவைகளை அணுகுவதற்கு அவர்களை தகுதிப்படுத்துதல். எ.கா: தேசிய ஊக்கத் தொகைக்கான தளம், CSC 2.0

**4. அதிக திறமையான அரசு நிர்வாகம்**

- குடிமக்களுடனான தொடர்பின் அடிப்படையிலேயே அரசின் திறமையானது மதிப்பிடப்படுகிறது.
- அதிக பொருட்செலவில் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய முறையிலான அரசு நிர்வாகமானது அதிக வளங்களை அழிக்கிறது.
- இந்த பாரம்பரிய முறையிலான நிர்வாக முறை அதிக நேரத்தை வீணடிக்கிறது. இதன் காரணமாகவே பொது சேவைகளின் தேவை எப்போதும் அதிகமாகவே உள்ளது.
- மின்னாளுகை வாயிலாக மேற்கொள்ளப்படும் தொடர்புகள் ஒரு திறமையான நிர்வாகத்திற்கு வழிவகுக்கிறது. எ.கா: NeGp.

**5. நிர்வாகத்தில் குறைவான ஊழல்**

- மின்னாளுகை என்பது ஊழலுக்கு எதிரான ஒரு ஆயுதமாக விளங்குகிறது. மின்னணுவியல் நடைமுறையை பயன்படுத்தி அரசுக்கும், குடிமக்களுக்கும், வணிகத்திற்கும் இடையிலான மக்களாட்சி அரசினை நிறுவுகிறது.எ.கா: E- DISHA, Bhoomi முதலியன.

**6. நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகப்படுத்துதல்**

- மின்னாளுகையானது அரசுக்கும், குடிமக்களுக்கும், இடையிலான நம்பகத்தன்மையை மேம்படுத்துகிறது. கொள்கை செயல்பாடுகளை வலைதளம் வாயிலாக மக்களை உட்படுத்தி செயலாற்றுவது அரசின் நிலைத்தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் குஷுக்கிறது. எ.கா: நேரடி பரிமாற்றங்கள்.

**7. குடிமக்களுக்கும் வணிகத்திற்குமான வசதிகள்**

- குடிமக்கள் அரசு சலுகைகளை வசதியான முறையில் பெறுகின்றனர்.- எ.கா: Pay Gov – தனியார் மற்றும் பொது வங்கிகளுக்கும் இடையில் பரிவர்த்தனைகள்.

**8. செலவுக்குறைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு**

- புதியக் கண்டுபிடிப்புகளை கருத்தில் கொண்டு, தகவல் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அவை மேம்படுத்தப்படும்போது அது அரசின் நிர்வாகச் செலவுகளை வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுகிறது.

**9. அரசின் சட்டப்பூர்வத்தன்மைகள்**

- தடையற்ற வலைதள சேவைகளை முதன்மையாகக் கொண்டு குடிமக்களைப் பற்றிய புரிதலுடன் மின்னாளுகையானது ஒரு மேம்படுத்தப்பட்ட சேவையை தருகிறது.
- இது அரசின் சட்டப்பூர்வத்தன்மையை அதிகரிக்கிறது.
- எ.கா: இந்தியாவை தனித்தன்மையுடைய அடையாளமாக நிறுவனப்படுத்துதல்.

**10. நிர்வாக செயல்பாடுகளில் குடிமக்களின் பங்களிப்பு**

- அரசு நிர்வாகத்திலும் கொள்கைகளிலும் MyGov வாயிலாக குடிமக்கள் பங்குகொள்கின்றனர்.

**11. உள்ளடக்கிய நிர்வாகம்**

- மின்னாளுகையானது உள்ளடக்கிய நிர்வாகமாக மாற்றம் பெறுதல்

1. இணைய பிணைப்பு மற்றும் தயார்நிலை
2. தாய்மொழி பயன்பாடு மட்டும் பயனாளர்களுக்கு இணக்கமான செயல்பாடு
3. நிர்வாக தேர்வுமுறை
4. CIO மூலமாக, கட்டமைப்பு, மேம்பாடு, நடைமுறை ஆகியவற்றை ஆய்வு செய்தல்
5. தொடர் கண்காணிப்பு மற்றும் சீராய்வு மூலம் மின்னாளுகையை மேம்படுத்துதல்

**12. உயர்த்தப்பட்ட சேவை தரம்**

- மின்னாளுகை தன்னுடைய சேவை தரத்தை உயர்த்தியுள்ளது. (எ.கா : நிலப்பதிவுகளை கணினிமயமாக்குதல்)

**5) தமிழ்நாடு மின்னாளுகை முகமை பற்றி விவாதிக்க. மேலும் மின்னாளுகை சுற்றுச்சூழலை மேம்படுத்தமுகமை கொண்டுள்ள கட்டமைப்பை விளக்குக**

**தமிழ்நாடு மின்னாளுகை முகமை** 1

- தமிழ்நாடு மின்னாளுகை முகமை ஒரு சுயாட்சி அமைப்பு
- தமிழ்நாடு சுங்கப்பதிவு சட்டம், 1975இன் கீழ் பதியப்பட்டது.
- இ–சேவா திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய முதன்மை நிறுவனமாக மின்னாளுகை முகமை திகழ்கிறது.

**மின்னாளுகை சூழலை மேம்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு** 12

**1. தமிழ்நாடு மாநில அளவிலான பரந்த வலைப்பின்னல் (TNSWAN)**

- இது தேசிய மின்னாளுகை திட்டத்தின் முக்கிய உறுப்பாக கருதப்படுகிறது.
- மத்திய அரசு இத்திட்டத்திற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.
- மத்திய அரசால் ஏப்ரல் 2005இல் அனுமதியளிக்கப்பட்டது.

**செங்குத்து வலைப்பின்னல்**

- கீழ்க்கண்ட அரசு துறைகள் இதன் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பான வலைதள சேவை
- நெருங்கிய பயனாளருடனான குரல் சேவை
- காணொலி சேவைகள்

**கிடைமட்ட இணைப்புகள்**

- 2000 அரசு அலுவலகங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவைக்கு அதிகமான இணைப்புகள்**

- மாவட்டங்கள், ஆளுநர் அலுவலகம், ஊரக மேம்பாட்டு அலுவலகம் ஆகியவற்றிற்கான பதிலிகள் (Proxy link) NKN / BSNL இன்அலைவரிசையுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

**2. அகன்ற அலைவரிசைக்கான இணைப்புகள்**

- அரசு அலுவலகங்களுக்கு குறைந்த செலவில் வலைதள இணைப்பை ஏற்படுத்தித் தருதல்
- பள்ளிகள் உட்பட 25000 அரசு அலுவலகங்களுக்கு அகன்ற அலைவரிசை இணைப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)**

- தமிழ்நாடு ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ள 39 அரசு துறைகளைச் சார்ந்த தரவுகள் TNSDC இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- 21 கூடுதல்தளங்களுடன் TNSDC இன் சேவையை விரிவாக்க ELCOT திட்டமிட்டுள்ளது.

**4. கணினி சேவையகம்**

- தரவு பதிவேற்றம், பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளுக்காக இச்சேவையக தளத்தை TNSDC உருவாக்கியுள்ளது.
- இது செயல்பாட்டு மென்பொருள் ஆகும்.

**5. தேசிய அறிவுசார் வலைப்பின்னல் (NKN)**

- மத்திய அரசால் நிறுவப்பட்ட ஒரு அதிவேக வலைப்பின்னல் இதுவாகும்.
- இது அறிவியலாளர்கள், விஞ்ஞானிகள், இயற்பியலாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான பொதுவான தளமாக இது உள்ளது.
- இது இந்திய மற்றும் தேசிய அளவிலான கல்வி நிறுவனங்களால் ஒருங்கிணைக்கப்பட்டது

**6. பேரிடர் மீட்பு மையம்**

- சுனாமி, நிலநடுக்கம் உள்ளிட்ட பேரிடர்களை சரி செய்வது மாநில தரவு மையங்களுக்கு மிகப்பெரிய ஒரு சவாலாக உள்ளது.
- அரசு சேவைகளை மேற்கொள்ள ஒரு பேரிடர் மீட்பு மையத்தை நிறுவுவது அவசியமாகிறது.
- தமிழ்நாடு மின்னாளுமை முகமையானது ஒரு நடைமுறைப்படுத்தும் முகமையாக பேரிடர் மீட்பு மையங்களால் நிறுவப்பட்டது.

**7. TNSDC ஆல் அமைக்கப்பட்ட மேகக் கணிமை (Cloud Computing)**

- மாநில தரவு மையம் உள்ள இடத்தில் மேகக் கணிமையானது அதன் உட்கட்டமைப்புடன் CDACஆல் நிறுவப்பட்டது.
- இலவச சேவை மற்றும் வேஷ்டி விநியோகத்திற்கான தரவுகள் அனைத்தும் இதில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொதுப் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தைச் சார்ந்து ERP – FMS மேம்படுத்தப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் புத்தகங்கள், படிக்கும் முறை மற்றும் பயன்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு மின்னாளுகை முகமைவாயிலாக செயல்படுத்தப்படுகிறது.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் கணினி மேகமையை கட்டமைப்பதில் ELCOT முக்கியப் பங்காற்றுகிறது.

**மின்னஞ்சல்**

- அரசுத் துறைகளுக்கு மின்னணுவியல் செயல்பாட்டில் இ-மெயில் அவசியமாகிறது.
- ஏறத்தாழ 3100 இ-மெயில்கள் தலைமைச் செயலக அலுவலர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இது மாவட்ட அளவிலான அரசுத் துறைகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

**TNeGA வின் முயற்சிகள்** 2

**1. இ-முன்னேற்றம்**

- மாண்புமிகு முதல்வர் M.K.ஸ்டாலின் அவர்களால் 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- தமிழகத்தில் அனைத்து உட்கட்டமைப்பு திட்டங்களையும் சரிபார்த்தல்
- ஒரு திட்டமானது தொடங்கப்பட்ட நாள், அதற்கான ஒதுக்கீடு, அதன் முன்னேற்றங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரவுகளையும் உள்ளடக்கியது.

**2. தகவல் தொழில்நுட்ப நண்பன்**

- தொழிற்சாலை கொள்முதலுக்கான ஒப்பந்தங்கள், அரசு சார்பான ஒப்பந்த விவரங்கள் ஆகியவற்றிற்கும் தனியார் துறைக்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

**6) மாநில பட்ஜெட் 2022 - 23 பட்ஜெட்டின் ஒவ்வொரு துறைசார்ந்த முக்கிய அம்சங்களை ஒளிரூட்டுக.**

**முன்னுரை** 15

- 2022 - 23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மற்றும் மார்ச் 18, 2022 அன்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.
- 2014ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஏறத்தாழ ஒவ்வொரு வருடமும் 7000 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட வகையிலான நிதிப்பற்றாக்குறை குறைப்பு ஆனது 4.61%லிருந்து 3.80%ஆக குறைக்கப்பட்டுள்ளது.

**2022 - 23 பட்ஜெட்டின் முன்னெடுப்புகள்**

**1. முதல்வரின் முகவரி**

- மக்கள் பிரச்சனை மற்றும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்ய "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின் ஒருங்கிணைந்த பகுதியாக முதல்வர் முகவரி திட்டம் ஏற்படுத்தப்பட்டது.
- இத்துறையில் ஏறத்தாழ 10,01,883 பிரச்சினைகள் கையகப்படுத்தப்பட்டது.

**2. தமிழ் மேம்பாடு மற்றும் கலாச்சாரம்**

- தமிழ் மொழி மற்றும் இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பங்களுக்கு இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்காக மொழியியலாளர்கள் ஒரு குழுவினை அமைத்து அகராதியை உருவாக்கினர்.
- இதற்காக அரசால் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**3. அகழ்வாராய்ச்சிகள்**

- திருநெல்வேலி மாவட்டத்தில் துலுக்கர்பட்டி, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையிலும். தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலையிலும் உட்பட 7 இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

- பொருநை ஆற்றுப் பகுதிகளில் தொல்லியல் ஆய்விடங்களும், புதிய கற்கால ஆய்விடங்கள் ஏறத்தாழ 5 மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளது.
- கொற்கைப் பகுதிகளில் ஆழ்கடலில் அகழ்வாராய்ச்சி செய்யவும், பாண்டிய துறைமுகங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளவும் இந்திய கடல்வழி பல்கலைக்கழகம் மற்றும் இணைந்து அகழ்வாராய்ச்சிக்கான பொருத்தமான இடங்களை தேடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.
- 7 இடங்களில் அகழ்வாராய்ச்சியும், 2 இடங்களில் தொல்லியல் ஆராய்ச்சியும், கொற்கையில் மேற்கொள்ளப்படும் தொடக்கப் பணிகளும் 5 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**4. அருங்காட்சியகம்**

- விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 10 கோடி செலவில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
- பழங்குடியினருக்கான அருங்காட்சியகம் தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் முந்தைய காலத்துக்கான அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
- 10 கோடி செலவில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நடுகற்களுக்கான அருங்காட்சியகம் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- 50 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள பாரம்பரிய கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டன.

**5. நில அளவை**

- அரசானது நிலங்கள், நீர் நிலைகள் ஆகியவற்றை ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க நிறை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தப் பணிக்காக 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. பேரிடர் மேலாண்மை**

- 1000 கோடி ஒதுக்கீட்டில் சென்னை போன்ற நகரங்களை வெள்ள சேதங்களில் இருந்து மீட்டெடுக்க ஒரு அறிவுறுத்தும் குழுவானது உருவாக்கப்பட்டது.
- எதிர்பாராத வெள்ளப்பெருக்குகள், முன்னரே அறிவுறுத்தும் கருவியின் தேவையை உணர்த்துகிறது.
- இது 100 தானியங்கி வானிலை நிலையங்கள் 400 தானியங்கி மழை அளவைகள் மற்றும் தானியங்கி நீர் அளவை குறிக்கும் எந்திரங்களால் 10 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**7. ஓய்வூதியம்**

- வயதானவற்களுக்கான ஓய்வூதியம் விதவைகளுக்கான ஓய்வுதியம் மற்றும் சமூக பாதுகாப்பு ஓய்வுதிய திட்டமானது இவ்வனைத்தையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தியது.
- இது ரூ4816 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**8. நீதி நிர்வாகம்**

- வணிகம் தொடர்பான பிரச்சினைகளை கையாள 7 வணிக நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளது.
- இது ரூ 1461.97 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**9. பள்ளிக் கல்வி**

- கொரோனா காலங்களில் பள்ளிகள் மூடப்பட்டதால் இல்லம் தேடி கல்வி திட்டமானது அந்த கல்வியிழப்பை ஈடு செய்வதற்காக 1.8 லட்சம் தன்னார்வலர்களுடன் 38 மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது.
- இதன் மூலம் 30 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- இது ஒரு முன்னோடி திட்டமாக விளங்குகிறது.

**10. உயர் கல்வி**

- பொருளாதாரத்தை பற்றிய புரிதல் மற்றும் விழிப்புணர்வு கொண்ட மக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த நோக்கத்தின் ஒரு பகுதியாக, ஒரு அறிவுசார் நகரமானது, தேசிய உதவியுடன் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- இந்த நகரமானது உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயிற்சி மையங்கள் உள்ளிட்ட வசதிகளை கொண்டுள்ளன.

**11. நான் முதல்வன்**

- வருடத்திற்கு 5 லட்சம் மாணவர்களின் கல்வி, அறிவு வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு செயலாற்றுகிறது.
- இது 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.
- இது முதலமைச்சரின் கனவுத் திட்டமாக விளங்குகிறது.

**12. செஸ் ஒலிம்பியாட்**

- செஸ் விளையாட்டின் ஒரு மதிப்புமிக்க போட்டியாக செஸ் ஒலிம்பியாட் விளங்குகிறது.
- 150 நாடுகளிலிருந்து 2000 விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.
- தமிழக விளையாட்டுத் துறைக்கு இது ஒரு திருப்பு முனையாக விளங்குகிறது.
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் இதற்கு 293.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. பொது ஆரோக்கியம்**

- புதிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் உட்பட 19 அரசு மருத்துவமனைகளை தரம் உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

- புதிதாக ஏற்படுத்தப்பட்ட 6 மாவட்டங்களில் மருத்துவமனையானது ரூ 1019 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

**14. சமூக நலன்**

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டமானது, மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வித் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.
- 6 முதல் 12 வரை படிக்கும் அனைத்து பெண் குழந்தைகளுக்கும் மாதம் ரூ1000 அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.
- இத்திட்டத்தின் மூலம் 6 லட்சம் மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

**15. போக்குவரத்து**

- பெண் பயணிகளின் சதவீதம் 40%லிருந்து 61%ஆக உயர்ந்ததை அடுத்து, பெண்களுக்கான இலவச பேருந்து திட்டம் அமல்படுத்தப்பட்டது.
- போக்குவரத்துத் துறையில் பெண்களுக்கான இலவச பயணத்துக்காக ரூ1520 கோடியும் ரூ 928 கோடி மாணவர்களுக்காகவும் 1300 கோடி டீசலுக்கான மானியமாகவும் வழங்கப்படுகிறது.

**16. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்**

- மாநில அளவில் நிறைய சிறு நிறுவனங்கள் உள்ளன.
- சிறு நிறுவனங்களுக்கான முன்னேற்ற நடவடிக்கை மூலமாக கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.
- சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கான துறைக்கு அரசு ரூ911.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. தொழிற்சாலைகள்**

- சிறப்பு நிதியாக ரூ100 கோடி ஒதுக்கீட்டில் பொது கட்டமைப்பு மற்றும் ஏற்றுமதிக்கான நிறுவனத்தை ஏற்படுத்தி, ஏற்றுமதிக்கான தரத்தை உயர்த்தி 2030க்குள் 100 பில்லியன் அளவிலான ஏற்றுமதியை சாத்தியப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தொழிற்சாலை துறைக்காக ரூ3,267.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18. புதிய தொடங்குதல்கள்**

- பங்குகளின் முதலீடுகளுக்கும் மற்றும் தொடங்குதல்களுக்கும் அரசு ரூ50 கோடி பங்களிக்கிறது.
- ஈரோடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பொருளாதாரத்திற்கான தொடங்குதல்களை ஊக்கப்படுத்தி தமிழ்நாடு புதுமைக்கான திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**19. தகவல் தொழில்நுட்பத்துறை**

- செயற்கை நுண்ணறிவு, இயந்திரம் பற்றிய புரிதல் முதலிய தொழில்நுட்பம் பற்றிய புதுமைகளை அரசு அங்கீகரிக்கிறது.
- இ-தமிழ்நாடு தொழில்நுட்ப மையமானது ரூ54.61 கோடி செலவில் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**20.ஊரக மேம்பாடு**

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் 2016 - 20ஆம் ஆண்டுவரை 1,77,922 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது.
- மாநில அரசானது ரூ1,68,000 ஒரு வீட்டிற்கு வழங்கப்படுகிறது.
- மேலும் கூடுதல் தொகையாக ரூ70,000 வழங்கப்படுகிறது.
- நடப்பு ஆண்டில் ரூ4848 கோடி செலவில் 2,30,788 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II
- கிராமங்களின் உட்கட்டமைப்பு பற்றாக்குறை குறைத்து பன்முகத்தன்மையில் செயலாற்றுகிறது.
- நடப்பு ஆண்டில் இத்திட்டம் 2,657 கிராம பஞ்சாயத்துகளில் 1,455 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**21. நகராட்சி நிர்வாகம்**

- திடக்கழிவு மேலாண்மையை உறுதிப்படுத்தும் விதமாக மத்திய, அரசானது ஸ்வச் பாரத் திட்டம் 2.0 உடன் இணைந்து செயல்படுகிறது.
- ரூ2,169 கோடி மாநில பங்களிப்புடன் மத்திய அரசால் ரூ5,465 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**7) ஆண்டு நிதிநிலை அறிக்கை என்றால் என்ன ? பாராளுமன்றத்தில் பட்ஜெட்டின் பல்வேறு நிலைகளைப் பற்றி எழுதுக.**

**முன்னுரை:** **1**

- ஆண்டு நிதிநிலை அறிக்கை – விதி 112
- பட்ஜெட் என்கிற வார்த்தை அரசியலமைப்பின் எந்த பிரிவுகளிலும் பயன்படுத்தப்படவில்லை
- பட்ஜெட் என்பது அரசின் வரவு மற்றும் செலவினங்களை உள்ளடக்கியது ஆகும்.

**பட்ஜெட் உள்ளடக்கம்** **2**

- இது வருவாய் மற்றும் மூலதன ரசீதுகளை விவரிக்கிறது
- வருவாயை உயர்த்துவதற்கான வழிமுறைகளை வழங்குகிறது
- செலவினங்களின் தொகுப்பு
- கடந்த நிதியாண்டிற்கான திட்டமிடப்பட்ட தொகை மற்றும் செலவினங்கள் குறித்த விவரம்

**இரண்டு பட்ஜெட்கள்** 1

- 2019 வரை, இந்தியா இரண்டு பட்ஜெட்களை கொண்டது
- ரயில்வே & பொது பட்ஜெட்
- அக்வொர்த் கமிட்டியின் பரிந்துரையின் கீழ் இப்பட்ஜெட்டானது 1921ம் ஆண்டு பிரிக்கப்பட்டு 1924 - 25 தாக்கல் செய்யப்பட்டது.

**பிரிப்பதற்கான காரணங்கள்** 1

- ரயில்வே பட்ஜெட்டில் நெகிழ்வுத் தன்மையை உருவாக்குவதற்காக ரயில்வே திட்டங்களுக்கான முயற்சியை சுலபப்படுத்தியது.
- ரயில்வே துறையின் ஆண்டு வருவாய் பங்களிப்பை நிலைப்படுத்தியது.

**அரசியலமைப்பு செயல்பாடுகள்** 1

- குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் செலவினங்களை அளிக்கிறார்
- குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் மானியங்கள் கோரப்படுவதில்லை.
- முறையான சட்ட வழிகாட்டுதல்கள் இல்லாமல் இந்தியாவில் தொகுப்பு நிதியினை பயன்படுத்துவது இல்லை
- சட்ட அங்கீகாரம் பெறாத அதிகாரியால் வரி மற்றும் வருவாய் வசூலிக்கப்படுவது இல்லை
- பாராளுமன்றமானது ஒரு வரியினை கூட்டவோ அல்லது குறைக்கவோ இயலாது ஆனால் தடை செய்யலாம்.

**இருவகையான செலவினங்கள்** 9

- இந்திய தொகுப்பு நிதியிலிருந்து விதிக்கப்படுகிறது
- தொகுக்கப்பட்ட நிதியில் செய்யப்படும் செலவினங்கள்

**1. தொகுப்பு நிதியின்மீது விதிக்கப்படுபவை**

- பாராளுமன்றம் வாக்கெடுப்பு அல்லாதது
- பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது

**வசூலிக்கப்படும் செலவினங்கள்**

- குடியரசுத் தலைவருக்கு மேற்கொள்ளப்படும் செலவினங்கள் மற்றும் அவர் அலுவலகம் தொடர்பான செலவினங்கள்
- நாடாளுமன்ற மேலவைத் தலைவர், மக்களவை சபாநாயகர், உச்சநீதிமன்ற நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதி ஆகியவர்களின் ஊதியங்கள்
- உச்சநீதிமன்ற நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதியின் ஓய்வூதியங்கள், தலைமை கணக்கு தணிக்கையாளரின் ஓய்வூதியங்கள்

**2. தொகுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள்**

- பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு உட்பட்டது

**நடைமுறைப்படுத்துவதற்கான 6 படிகள்**

1. பட்ஜெட் தாக்கல்
2. பொது விவாதம்
3. துறை கண்காணிப்புக் குழு
4. மானியங்கள் மீதான வாக்கெடுப்பு
5. ஒதுக்கீட்டு மசோதா
6. நிதி மசோதா

**1. பட்ஜெட் தாக்கல்**

- 2017க்கு முன்பு வரை மக்களவைக்கான கடைசி வேலை நாள் பிப்ரவரியாக இருந்தது
- 2017-இருந்து பிப்ரவரி முதல் நாளில் தாக்கல் செய்யப்பட்டது.
- மக்களவையில் நிதியமைச்சரால் தாக்கல் செய்யப்படுகிறது.
- நிதியமைச்சரின் பட்ஜெட் தாக்கல் உரை பட்ஜெட் உரை என்றழைக்கப்படுகிறது. இது இரு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது
- பகுதி – அ – இந்தியாவின் பொது பொருளாதார நிலையை குறிக்கிறது
- பகுதி ஆ - வரிவிதிப்புக்கான முன்மொழிவுகள்
- பட்ஜெட்டின் மீது அந்த நாள் எந்த விவாதமும் மேற்கொள்ளப்படுவதில்லை.
- மக்களவை முடிவில், அறிக்கையானது மேலவையின் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.
- மேலவையானது இதன் மீது விவாதங்கள் மற்றும் மேற்கொள்கிறது. மானியங்களுக்கான வாக்களிக்கும் அதிகாரம் இதற்கு இல்லை.

**2. பொது கலந்தாய்வு**

- அறிக்கை தாக்கல் மேற்கொள்ளப்பட்ட சில நாட்களில் அதன் மீதான விவாதம் தொடங்கும்.
- இரு அவைகளிலும் கலந்தாய்வு மேற்கொள்ளப்படுகிறது
- கடைசி 3 - 4 நாள்களில் வாக்களிப்பு அல்லாமல்ம விவாதம் மேற்கொள்ளப்படுகிறது

**3. துறை கண்காணிப்புக்குழு**

- பொது விவாதத்திற்கு பின்பு இரு அவைகளும் 3 - 4 வாரங்கள் ஒத்திவைக்கப்பட்டது
- 24 கண்காணிப்பு குழுக்கள் இவற்றை ஆராய்ந்து பரிந்துரை வழங்குகிறது
- நிலைக்குழு - 1993ல் ஏற்படுத்தப்பட்டது.

**4. மானியங்கள் மீதான வாக்கெடுப்பு**

- ஒவ்வொரு அமைச்சகங்களாக தேவைகளை தாக்கல் செய்கின்றன.

SURESH'

- முறையான வாக்குப்பெற்று கோரிக்கைகள், மானியங்கள் ஆகின்றன
- இது மக்களவைக்கான சிறப்புத் தகுதியாகும்.
- கோரிக்கை நிறைவேற்றங்களை தாமதப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கை வெட்டு இயக்கம் என்று அழைக்கப்படுகிறது.

**வெட்டு இயக்கம்**

**கொள்கை வெட்டு இயக்கம்**

- கோரிக்கையானது ரூ.1 அளவிலாவது குறைக்கப்படுவதைப் பற்றி விவரிக்கிறது

**பொருளாதார வெட்டு இயக்கம்**

- கோரிக்கையானது ஒரு குறிப்பிட்ட தொகையாக குறைக்கப்படுவதை பற்றி விளக்குகிறது

**டோக்கன் வெட்டு இயக்கம்**

- தொகையானது ரூ.100 வரை குறைக்கப்படுவதை விவரிக்கிறது
- மானியத்தின் மீதான கோரிக்கையை குறைக்க பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை
- 26 நாட்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது
- கடைசி நாள், எஞ்சியுள்ள அத்தனை கோரிக்கைகளும் சபாநாயகரால் அறிமுகப்படுத்தப்பட்டு அது உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டிருந்தாலும் நிராகரிக்கப்படுகிறது.
- இது "கில்லட்டின்" (Guillotine) என்றழைக்கப்படுகிறது

**5. ஒதுக்கீட்டு மசோதா**

- சட்ட நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் தவிர்த்து வேறு எந்த நிதியும் தொகுப்பு நிதியின் மீது கோரப்படுவதில்லை.
- ஒதுக்கீட்டு மசோதாவானது, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று ஒதுக்கீட்டுச் சட்டமாக ஆகிறது.
- இது தொகுப்பு நிதிகளின் மீது மேற்கொள்ளப்படும் செலவுகளை முறைப்படுத்துகிறது

**கணக்கின் மீதான வாக்கெடுப்பு**

- ஒதுக்கீட்டு மசோதாவானது சட்டமாக்கப்பட ஏப்ரல் இறுதி ஆகிறது. ஆனால் அரசுக்கான பணத் தேவைகள் மார்ச் 31 அடுத்து தொடங்கி வருகிறது.
- வாக்கெடுப்புக்கா மசோதா நிலுவையில் உள்ள பொழுது மக்களவையானது அதற்கான செலவினங்களை நடப்பு நிதி ஆண்டிலேயே அனுமதிக்கிறது
- இது பொது விவாதத்திற்கு பின்பு அனுமதிக்கப்படுகிறது
- மொத்தத் தொகையில் 6ல் ஒரு பங்குத் தொகையானது இரண்டு மாதத்திற்கு அனுமதிக்கப்படுகிறது.

**6. நிதி மசோதா**

- அரசின் நிதி சார்ந்த முன்மொழிவுகளை பலப்படுத்துகிறது
- நிதி மசோதாவுக்கான அத்தனை சட்டங்களும் கட்டுப்பத்துகிறது
- 75 நாட்களுக்குள் குடியரசுத் தலைவரால் அனுமத அளிக்கப்பட வேண்டும்
- இவ்வாறு, இந்த மசோதாவானது, சட்டமாகிறது.

**8) தமிழக அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021 பற்றி விரிவாக விளக்குக. 1**

- தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021 ஆனது சமூக வலைதளம் மற்றும் OTT தளங்களைப் பற்றி விவரிக்கிறது. இந்த சட்டமானது பிரிவு 87(2) தகவல் தொழில்நுட்பச் சட்டத்தைச் சாரும்.

**சமூக ஊடகம் / இடைத்தரகர்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள் 6**

**1. சமூக ஊடகம் மற்றும் இடைத்தரகர்களுக்கான பிரிவு**

- சமூக வலைதளங்களை பயன்படுத்தும் பயனாளர்களின் அடிப்படையில் இந்தத் தளமானது இரு பிரிவாக பிரிக்கப்படுகிறது.

1. சமூக ஊடக இடைத்தரகர்கள்
2. குறிப்பிடத்தக்க சமூக ஊடக இடைத்தரகர்கள்

**2. இடைத்தரகர்களின் இடைவிடாத முயற்சி**

- இடைவிடாத முயற்சியை இடைத்தரகர்கள் மேற்கொள்வதில்லை. பாதுகாப்பு துறைமுக ஏற்பாடானது இவர்களுக்கு பொருந்தாது.
- துறைமுக பாதுகாப்பு ஏற்பாடானது தொழில்நுட்பச் சட்டம் பிரிவு 79 இன் கீழ் வரும். இடைத்தரகர்களை பலப்படுத்தும் விதமாக இச்சட்டமானது சட்டச் செயல்பாடுகளுக்கும் பதிவேற்றத் தளங்களிலும் துணை செய்கிறது.

**3. குறைதீர்க்கும் செயல்முறை**

- இடைத்தரகர்கள் தங்களுக்கான குறைதீர்க்கும் அதிகாரியை நியமித்து புகார்களை கையாள்கின்றனர்.
- புகார் பெறப்பட்ட 24 மணி நேரத்திற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரி பதில் தெரிவிக்க வேண்டும். புகார் பெறப்பட்ட 15 நாளைக்குள் அதைத் தீர்க்க வேண்டும்.
- புகார் பெறப்பட்ட பின் 24 மணி நேரத்திற்கு இணைய பயன்பாட்டை துண்டிக்க அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.
- பயன்பாட்டாளரின் அநாகரிகமான நடவடிக்கைகள் குறித்த இந்த புகாரானது தனி ஒருவராலோ அல்லது தனி ஒரு நபர் சார்பாகவே புகார்கள் அளிக்கப்படலாம்.

**4. குறிப்பிடத்தக்க சமூக வலைதளத்துக்கான இடைத்தரகர்களின் கூடுதல் முயற்சிகள்**

- நியமனங்கள் : தலைமை இணக்க அதிகாரி, ஒருமுனைத் தொடர்பு அதிகாரி மற்றும் குறை தீர்ப்பு அதிகாரி

- இணக்க அறிக்கை : பெறப்பட்ட புகார்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாதாந்திர இணக்க அறிக்கையை வழங்குதல் வேண்டும்.

**5. சட்டவிரோதமான தகவல்களை நீக்குதல்**

- ஒரு தனிப்பட்ட முகமையானது அல்லது இடைத்தரகர்கள், நீதிமன்றம் அல்லது குறிப்பிட்ட அரசு மூலமாக பெறப்பட்ட தகவல்கள் ஒரு தகவலை பரப்புவதற்கு எதிராக இருந்தால் அந்தச் செயல்முறையானது சட்டத்திற்கு எதிரானதாக கருதப்படுகிறது.

**செய்தித்தாள் OTT தளம் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கான வழிமுறைகள்** 7

**1. உள்ளடக்க விவரங்கள்**

- நிர்வகிக்கப்பட்ட தரவுகளை விருப்பத்தின் அடிப்படையில் வலைதளத்தில் வெளியிடுவதற்கான இடைவெளியை OTT தளம் ஏற்படுத்தி தருகிறது. இதனை 5 படிநிலைகளாக பகுக்கின்றனர்.
- U – Universal
- U/A 7+
- U/A 13+
- U/A 16+
- A - Adult

**2. உச்ச பாதுகாப்பு**

- U/A 7 + மற்றும் நம்பகமான ஒரு செயல்முறையை, ஒரு உச்ச பாதுகாப்பு முறையை அளிக்கும் ஒரு கட்டமைப்பை உருவாக்கித் தருதல்

**3. காட்சி மதிப்பீடு**

- ஒவ்வொரு பதிவுகளுக்கும் தனிப்பட்ட காட்சி மதிப்பீட்டு தரவுகளை அதன் பயனாளர்களுக்கு விபரப்படுத்துதல்
- காட்சிப்படுத்துவதற்கு முன்பு பயனாளர்களுக்கு தேவையான முன்முடிவுகளை வெளியிடுதல்

**4. செய்தி மற்றும் டிஜிட்டல் ஊடகவியலாளர்கள்**

- இந்திய பத்திரிகையாளர்களின் பத்திரிக்கை சபை மற்றும் கேபிள் தொலைக்காட்சி வலைபின்னல் சட்டம் 1995-ன் கீழ் பயனாளர்களுக்கான வழிமுறைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**5. குறை தீர்க்கும் முறை**

- இது செயல்பாட்டிற்கான 3 அடுக்குகளை பரிந்துரைக்கிறது
- Level I – ஒளிபரப்பாளர்களின் சுயக்கட்டுப்பாடு
- Level II – ஒளிபரப்பாளர்களுடைய சுயக்கட்டுப்பாட்டு அமைப்புகளின் கட்டுப்பாடுகள்
- Level III - முடிவு பெற்ற செயல்முறைகள்

**6. ஒளிபரப்பாளர்களின் சுயக்கட்டுப்பாடு**

- குறை தீர்க்கும் அதிகாரியாக ஒருவரை ஒளிபரப்பாளர்கள் நியமிக்கின்றனர். குறைகளை தீர்ப்பதற்கு அவர் பொறுப்புடையவராகிறார்.
- புகார்கள் பெறப்பட்ட 15 நாளைக்குள் அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**7. சுயஒழுங்குமுறை அமைப்பு**

- பதிப்பகத்தார்க்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுய ஒழுங்குறை அமைப்புகள் இருக்கலாம்.
- இந்த அமைப்பானது ஒரு பணி ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியினாலோ, உயர்நீதிமன்றத்தை சார்ந்த ஓய்வுபெற்ற நீதிபதி உள்ளிட்ட நபர்கள் இடம்பெறுகின்றனர் 6 உறுப்பினர்களுக்கு மேல் அனுமதி கிடையாது.
- இந்த அமைப்பானது தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
- இது பதிப்பகத்தாரையும் அவர்களுடைய குறைகளை கண்டறிந்து அதனை 15 நாட்களுக்குள் தீர்வு காண்பதற்கான வழிமுறையைச் செய்கிறது.

**8. மேற்பார்வை செயல்முறைகள்**

- இதனை தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம் ஒருங்கிணைக்கிறது
- சுய கட்டுப்பாட்டு அமைப்புகளுக்கான சாசனங்களை இது பரப்புகிறது. குறைகளை கேட்டறிவதற்கு துறைகளுக்கு இடையிலான குழுவை இது நியமிக்கிறது.

**முடிவுரை** 1

- தகவல் தொழில்நுட்ப சட்டம் 2021 மூலம் சமூக வலைதள நிறுவனங்களான முகப்புத்தகம், டிவிட்டர் ஆகியன இந்தியாவிற்கான குறைதீர் அதிகாரியை நியமிக்க வேண்டும். இவர் மூன்றாம் தரப்பு தகவல்கள் குறித்த புகார்களை கையாள்கிறார்.

